குமரகுருபரரின் தமிழ் உள்ளம்

முனைவர் ந. முருகேசன்



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பஙு 7208

குமரகுருபரரின் தமிழ் உள்ளம்

(காசி குமரகுருபரர் மாநாட்டு நினைவு
அறக்கட்டளைச் சொற்பொழிவு)

முனைவர் ந. முருகேசன்

ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-431-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 388

நூல் : குமரகுருபரரின் தமிழ் உள்ளம்

ஆசிரியர் : முனைவர் ந. முருகேசன்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2043, புரட்டாசி
முதற்பதிப்பு - செப்டம்பர் 2012

பக்கம் : 86 + 8

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1200

விலை : உரூ. 80.00

ஒளியச்சு : முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,
தெற்கு வீதி, தஞ்சாவூர்.

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முனைவர் ம. திருமலை
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
17.09.2012

அணிந்துரை

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம், தங்க வரிகளால் தமிழர்களின் மாண்பை உணர்த்தும் சங்க இலக்கியம், ஓதி உணர்ந்தால் உயர வழிகாட்டும் திருக்குறள் உள்ளிட்ட நீதிநூல்கள், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்கள், பக்தியுணர்வாலும் பைந்தமிழ்ச் சுவையாலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் திவ்வியப் பிரபந்தங்கள் - தேவார திருவாசகங்கள், பெரிய புராணம், கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்கள் எனக் காலந்தோறும் பொங்கிப் பாய்ந்து வந்த தமிழ்ப் புதுவெள்ளம் சற்றே ஓய்ந்திருந்த நேரம் - வேற்று மன்னர்கள் வரவு, ஆதரவு இன்மை, பண்பாட்டுப் படையெடுப்பு போன்ற காரணங்களால் புலவர்கள் தம் எழுதுகோலிற்கு விடுமுறை விட்ட காலம் - இந்நிகழ்வுகள் நம் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருக்கத்தான் செய்தன. காலச்சக்கரம் எப்போதும் ஒரே மாதிரி நிலைகொள்வதில்லை. 'காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை' எனப் புலவர்களால் எத்துணைக் காலத்திற்கு வாளாவிருக்க முடியும்? மீண்டும் புறப்பட்டது புலமைப் பட்டாளம். வேறுதிசையில் கவனம் திரும்பியது. அந்தாதி, கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத் தமிழ், சதகம், மாலை, தூது, குறவஞ்சி, பள்ளு என வகைவகையான சிற்றிலக்கியங்களால் தமிழ்த்தாய் தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள். இத்தகைய பொன்னான நேரத்தில் - பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிப் பைந்தமிழுக்கு வளம் சேர்த்தவர்தான் குமரகுருபரர்.

ஐந்து வயது வரை பேச இயலா நிலையிலிருந்த இவர் முருகப்பெருமான் திருவருளால் பேசுந்திறம் பெற்ற உடனேயே

பைந்தமிழ் மணம் கமழும் பக்திப் பனுவல் பாடினார் என்பது வரலாறு. கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமரசாமி பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம், பண்டார மும்மணிக்கோவை, திருவாரூர் நான்மணிமாலை, மதுரைக் கலம்பகம், சிதம்பர மும்மணிக்கோவை, சகலகலாவல்லி மாலை எனப் பற்பல படைப்புகள் வாயிலாகத் தமிழைச் செழுமைப் படுத்தியவர் இவர்.

குமரகுருபரரின் தமிழ்ப்பற்று அளவிடற்கரியது. இருப தாம் நூற்றாண்டில் வார்த்தைக்கு வார்த்தை தமிழைப் புகழ்ந்து தள்ளியும் ஆசை தணியாத பாவேந்தர் பாரதிதாசனைப் போன்று அருந்தமிழ், செழுந்தமிழ்த் தெள்ளமுது, சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ், புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ், இசை முத்தமிழ் என்றெல்லாம் அகங்குளிரப்பாடி 17ஆம் நூற்றாண்டில் தமிழை உச்சாணிக் கொம்புக்கு ஏற்றியவர்.

தமிழ்ப்பெரும்புலவர்கள் சிலரேகூடத் தமிழ்மொழியின் பெருமையைப் புறந்தள்ளியதோடு இகழ்ந்தும் பேசி, பிற மொழிக் குத் தம்பட்டமடித்துக் கொண்டிருந்த இக்கட்டான காலகட்டத்தில் தம் படைப்புகளிலெல்லாம் தமிழின் தனிப் பெருஞ்சிறப்பை மிகுதியாக எடுத்துக்கூறி நிலைநாட்டியவர் குமரகுருபரர். இப் பெருந்தகையை 17ஆம் நூற்றாண்டின் தனித்தமிழ் இயக்கத்தந்தை என்றும், தமிழ்க் காவலர் என்றும் கூறுவது முற்றிலும் பொருந்தும்.

தமிழை ஓர் இயக்கமாகவே நடாத்திய இத்தகைமையாளர் சமுதாய வளர்ச்சியில் தனி அக்கறை கொண்டு அள்ளி அள்ளி வழங்கியுள்ள கருத்துகள் ஏராளம். சான்றுக்கு ஒன்று குறிப்பிடல் தகும். இவரது 'நீதிநெறி விளக்கம்' எனும் நூல் ஓர் அமுத ஊற்று. இதில் கல்வியின் பயன் பற்றி இவர் எடுத்துரைக்கும் செய்தி அனைவரும் நினைவில் கொள்ளத்தக்கதாகும். அடங்காத காமம் தொடக்கத்தில் இன்பம் தருவதாய்த் தோன்றும்; போகப்போக இந்த இன்பத்தைவிட அது தரும் துன்பம் மிகப்பெரியதாக இருக் கும். ஆனால், கல்வி எப்படிப்பட்டது தெரியுமா? தொடக்கத்தில் சற்றுத் துன்பம் போன்று தெரியும்; போகப்போக அறியாமையைப் போக்கி, அறிவைப் பெருக்கி எப்போதும் எப்போதும் பேரின்பத் தையே தரும் என்கிறார் குமரகுருபரர். இக்கருத்தமைந்த,

தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன்று அறிவகற்றும் கல்வி - நெடுங்காமம்
முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது

எனும் இப்பாடல் அனைவரும் அகத்தினில் இருத்த வேண்டிய அமுதப்பாடல் அன்றோ!

இவரது படைப்புகள் பக்திச்சுவை நனிசொட்டும் பைந் தமிழ்ச்சுரங்கம்; முத்தமிழ்ச்சிறப்பும் முற்போக்குச்சிந்தனைகளும் நிரம்பிய கருத்துக் கருவூலம். இத்தகைய பெரும்புலவரின் தமிழ் உள்ளம் எத்தகையது என்பதை ஆசிரியர் முனைவர் ந. முருகேசன் இந்நூலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். குமரகுருபரரின் உள் ளம் பக்தி மணம் கமழ்வது, குருபக்தி நிறைந்தது, கவிதையார் வமும் கல்வி ஈடு பாடும் உடையது, தொண்டு நோக்கம் கொண் டது, தன்மான உணர்ச்சியும் ஒழுக்கமும் மிகுந்தது, பொதுநோக்கு சார்ந்தது, தமிழ்ப்பற்று நிறைந்தது, மானுட மேம்பாட்டை வலி யுறுத்துவது என்றெல்லாம் ஆதாரங்களோடு அடுக்கிச் செல்கிறார் ஆசிரியர்.

சங்கப் புலவர்கள், திருவள்ளுவர், கம்பர், ஔவையார், அருணகிரிநாதர், பட்டினத்தார், பாரதியார், கண்ணதாசன் என ஏராளமான புலவர்களும் கவிஞர்களும் குமரகுருபரருடன் இந் நூலில் வாசம் செய்கின்றனர். பக்தி மணமும் பைந்தமிழ் மணமும் கமழும் நூலாக இது திகழ்கிறது. நூலாசிரியருக்கு என் வாழ்த்து களை உரித்தாக்குகிறேன். தமிழின்பம் நுகர அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

முன்னுரை

சைவப் பணியும் தமிழ்ப் பணியும் சிறப்பாக ஆற்றி வரும் திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் அதிபர் கயிலை மாமுனிவர் காசிவாசி திருவளர்திரு முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் தம் திருமடத்தின் ஆதிமுதல்வராகிய செந்தமிழ்க் கவிஞர் சீர்மிகு துறவி குமரகுருபரர் உள்ளத்தையும் பெருமையையும் புலப் படுத்தும் நோக்கில் காசியில் 1999ஆம் ஆண்டு ஒரு மாநாடு நடத்தி னார்கள்.

அம்மாநாடு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையுடன் இணைந்து நடத்தியதாகும். குமரகுருபரர், முகமதியர் ஆட்சி நடைபெற்ற வடபுலத்திற்கு அஞ்சாமல் சென்று, தமிழையும் சைவத்தையும் வளர்த்தமையால், மாநாடு காசியில் நடைபெறுவது சிறப்பு என்று, அச்சமயம், தஞ்சைத் தமிழ்ப் பல் கலைக்கழக ஓலைச்சுவடித்துறைத் தலைவராக விளங்கிய அமரர் முனைவர் த.கோ. பரமசிவம் அவர்கள் கூறி, மாநாடு காசியில் நடைபெற ஏற்பாடு செய்தார்கள்.

தமிழ் அறிஞர்களும், சைவசமயச் சான்றோர்களும் கலந்து கொண்ட அம்மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அம்மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப் பட்டன. குமரகுருபரர் புலமையையும், தமிழ்ப் பற்றையும், சைவ சமயத்தை வளர்த்த அருமையையும் அம்மாநாட்டுக் கட்டுரைகள் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழ் அறிஞர்களும் சமயச் சான்றோர்களும் போற்றிய அம்மாநாட்டின் நினைவாக, திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் அதிபர், தமிழ் வளர்க்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஓர் அறக்கட்டளையை நிறுவினார்கள்.

அவ்வறக்கட்டளையின் வழி, 21.03.2003 மாலை, தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில், ‘குமரகுருபரரின் தமிழ் உள்ளம்’ என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினேன். தமிழ் உள்ளம் என்பதன் பொருளைக் கூறி, குமரகுருபரர் தமிழ் உள்ளத் தைப் புலப்படுத்தி உரையாற்றினேன்.

தமிழ் உள்ளம் என்பதன் பொருள் என்ன? தமிழ் படித்த வனின் - தமிழ் இலக்கியங்களை நன்கு உணர்ந்தவனின் உள்ளம் என்று பொருள். தனக்குமுன் வாழ்ந்த புலவர்களின் உயர்ந்த

சிந்தனைகளால் விளைந்த அரிய கருத்துக்களை நன்கு உணர்ந்த புலவனின் உள்ளம் என்று பொருள். இவ்வண்ணம் நோக்கும் போது, குமரகுருபரர் தமிழ் உள்ளம் என்பது, அவர் உணர்ந்த தமிழ் இலக்கியக் கருத்துக்களால் செம்மைப்பட்ட உள்ளம் என்பதாகும்.

தமிழ் இலக்கியங்களை நன்கு உணர்ந்த குமரகுருபரர் உள்ளம் எத்தகையது? சைவம் வளர்த்த சிவநேசச் செல்வராகிய குமரகுருபரர் உள்ளத்தைப் பற்றி ஒரு சமயச் சான்றோர் கூறுவதை விடவும் ஒரு நாத்திகக் கவிஞர் கூறுவது சிறப்புடையதன்றோ?

எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் என்று முழங்கி, நாத்திகக் கவிஞராக இறுதிவரை வாழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தாம் படைத்த 'எதிர்பாராத முத்தம்' என்ற குறுங்காப்பியத்தின் இரண்டாம் பகுதியில், குமரகுருபரர் வாழ்வைக் கூறிச் செல்லும்போது, 'இருள் ஒன்றில்லான்' என்று பாடுவார். குமரகுருபரரை நன்குணர்ந்த ஒரு நாத்திகக் கவிஞரின் கவி உள்ளத்தில் இருந்து வெளிப்பட்ட சரியான - அருமையான தொடரிது!

மனத்தகத்து அழுக்கில்லாத, உயர்ந்த சிந்தனைகள் உடைய, ஞானவெளிச்சமும் செந்தமிழ்ப் புலமை வெளிச்சமும் கொண்ட, மனிதநேயம் மிக்க, அச்சம் என்பதை அறியாத, இருள் ஒன்றில்லாத குமரகுருபரர் உள்ளத்தைப் பற்றிய சொற்பொழிவு இப்போது நூல்வடிவம் பெற்றுள்ளது.

அன்று, செந்தமிழ்க் கவிஞர் குமரகுருபரர் பாடிய தமிழ்க் கவிதையைக் கேட்டுப் போற்றினார் மதுரை வேந்தர் திருமலை. இன்று, குமரகுருபரர் பற்றிய நூலை வெளியிட்டுப் போற்றுகிறார், மதுரையில் இருந்து வந்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் ம. திருமலை. வியப்புக்குரியதாகும் இது.

நூலை வெளியிடும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும், மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. திருமலை அவர்கட்கும், நூற்பணியில் உதவி புரிந்த, என் அருமை மாணவர் முனைவர் கோ.ப. நல்லசிவத்திற்கும் என் நெஞ்சார்ந்த நன்றி!

கும்பகோணம் — அன்பன்

12.09.2012 — **ந. முருகேசன்**

குமரகுருபரரின் தமிழ் உள்ளம்

கற்றைசடை முடிஈசர் விழிபி றந்த
கவின்செந்தில் ஆண்டவனின் அருளைப் பெற்று,
நற்றமிழில் கவிபாடி, தருமை ஞானி
நவின்றஞான மயமாகி, காசி சென்று,
பொற்றமிழை, சைவத்தை நனிவ ளர்த்துப்
பணிதொடரப் பரம்பரையைத் தோற்று வித்துக்
கொற்றவரும் பணிந்தேத்தப் பெருமை கொண்ட
குமரகுரு பரர்தாளை வணங்கு வோமே!

திருவிளையாடற் புராணமும், மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதியும் பாடிய பரஞ்சோதி முனிவர், வைராக்கிய தீபமும் வைராக்கிய சதகமும் இயற்றிய பேரூர் சாந்தலிங்க சுவாமிகள், சுத்த சாதகமும் மகாராசா துறவும் படைத்த ஞானவேந்தர் குமார தேவர். திருமுருகன் அருள்பெற்றுத் திருப்போரூர் சந்நிதிமுறை புனைந்த சிதம்பரசுவாமிகள், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழும் சேயூர்க் கலம்பகமும் இசைத்த அந்தகக்கவி வீரராகவ முதலியார் முதலிய பெரும் புலவர்கள் வாழ்ந்த பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், கவிதைவளம் மிக்க பல சிற்றிலக்கியங்களைப்

படைத்துச் செந்தமிழ்த் தொண்டும் சைவசமயத் தொண்டும் புரிந்த சிற்றிலக்கிய வேந்தர் குமரகுருபரர்.

அவருடைய வாழ்வின் சிறப்பையும் பணியின் பெருமையையும் ஆய்வு செய்து, உலகிற்குப் புலப்படுத்த, 1999இல், திருப்பனந்தாள் காசித் திருமடமும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையும் இணைந்து, சீரிய மாநாடு ஒன்றை நடத்தின. அம்மாநாட்டின் நினைவாக ஓர் அறக் கட்டளையை நிறுவி, ஆண்டுதோறும் கவிஞர் கோமான் குமர குருபரரை நினைத்து, அவர்தம் அரிய இலக்கியவுணர்வை, சீரிய தொண்டுள்ளத்தைப் போற்றவும், உணர்ந்து பின்பற்றவும், காசித் திருமடத்து அதிபர் திருவளர்திரு காசிவாசி எஜமான் சுவாமிகள், வழிவகுத்தார்கள். அவர்களுடைய நல்ல உள்ளத்திற்கு நன்றியை யும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வது கடமையாகும்.

தமிழ் உள்ளம்

'குமரகுருபரரின் தமிழ் உள்ளம்' என்பது தலைப்பு. இந்நாளில், இலக்கியம் என்பதற்கு மாற்றுச் சொல்லாக, தமிழ் என்ற சொல் வழங்கப்படுவதைக் காணமுடிகிறது. தமிழ் இலக்கியம் பயிலும் மாணவனிடம், என்ன படிக்கிறாய் என்று கேட்டால், அவன், தமிழ் படிக்கிறேன் என்று சொல்வதைக் கேட்கிறோம். எனவே தமிழ் உள்ளம் எனில் இலக்கிய உள்ளம் என்று பொருளாகிறது. இலக்கிய உள்ளம் எத்தகையதாக இருக்கும்? சிறப்புடையதாக இருக்கும்; இருக்க வேண்டும். குமரகுருபரரின் தமிழ் உள்ளமும் மிகுந்த சிறப்புடையது; சிறப்புடைய அவ்வுள்ளத்தைப் புலப்படுத்துவது நோக்கமாகும்.

பக்தி மணம்

குமரகுருபரர் என்று சொன்னதும், அவருடைய தவவடிவு, ஆற்றிய பணிகள் ஆகியவை, அடிமனத்திலே தோன்ற, அவரை ஓர் ஆன்மிகவாதியாக, நம் உள்ளம் நினைக்கும். அவர் வாழ்வின்

தொடக்கமே பக்திமயமானது. அய்ந்து வயது வரை பேசாதிருந்து, செந்தில் ஆண்டவன் அருள்பெற்றுப் பேசத் தொடங்குகிறார் குமரகுருபரர்; கவிதை பாடுகிறார். முதற்படைப்பு பக்திக் கவிதையாக வெளிப்படுகிறது. ஓர் இலக்கியவாதியாக மலர்கிற போதே, பக்தி மணமே அவருடைய உள்ளத்தில் கமழ்கிறது.

''சைவக் கொழுந்தே! தவக்கடலே! வானுதவும்
தெய்வக் களிற்றைமணம் செய்தோனே! - பொய்விரவு

காமம் முனிந்த கலைமுனிவன் கண்அருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப் - பூமருவு

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனல் புனம்காத்து இனிதிருந்து - மேன்மைபெறத்

தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே! - உள்ளமுவந்(து)

ஆறு திருப்பதிகண்(டு) ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!''

என்று கந்தவேளை நெஞ்சுருகிச் செந்தமிழ்ச் சொற்களால் பாடுகிற போதும்,

''இம்மைப் பிறப்பில் இருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மை விடுத்(து)

ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய

அடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்நின்(று) அருள்''

என்று, பந்த பாசங்களை உதறிவிடும் ஞானவாழ்வையே விரும்பி வேண்டுகிறபோதும் அவருடைய உள்ளத்துப் பக்தியை உணர்ந்து கொள்கிறோம். ஞான பண்டிதனின் அருளைப் பெற்றமையால் அவர் உள்ளம் ஞானமயமாக - பக்திமயமாகவே ஆகிவிடுகிறது. ஆன்மா விடுதலை பெறக் குருநாதன் வேண்டும் என விண்ணப் பிக்கின்றார். வாக்குத் தடைபடும் இடம் எதுவோ அதுவே குருபீடம் என்று வானொலி கேட்டுச் செந்திலை விட்டுப் புறப்படுகின்றார். பின்னர் அவர்தம் வாழ்வு, இறைவனைப் பாடும் வாழ்வாகவும், ஞானகுருவைத் தேடித் தலயாத்திரை மேற்கொள்ளும் வாழ்வாகவும்; சைவப் பணியாற்றும் தொண்டு வாழ்வாகவும் ஒளிவீசுவதால், அவர் மனத்தைப் பக்தி ஆட்கொண்டு விட்டதை உணரலாம்.

> ''நீரிற் குமிழி இளமை; நிறைசெல்வம்
> நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்; - நீரில்
> எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
> வழுத்தாத(து) எம்பிரான் மன்று.''

என்ற நீதிநெறி விளக்கப் பாடல்மூலம், நிலையாமை உணர்வே, பக்திக்கும் ஞானவேட்கைக்கும் அடிப்படைக் காரணம் எனலாம்.

குருபக்தி

இறைவனுடைய அருளைப் பெறுவதற்குக் குருவருளே சீரிய சாதனமாகும்; பிறவியாகிய கடலைக் கடப்பதற்குரிய மரக்கலம் இறைவனுடைய பொன்னார் திருவடி; அம்மரக் கலத்துக்கு மாலுமி குருநாதர் என்பர். குருவருள் பெற்ற திருமூலர்

> ''தெளிவு குருவின் திருமேனி காண்டல்
> தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
> தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
> தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.''

ன்று பாடியருளினார். எனவே ஞான வேட்கையுடன் குருநாதரைத் தேடிச் சென்ற குருபரர், தருமபுரத்தில், மாசிலாமணி தேசிகர் என்னும் சிவஞானச் செம்மலால் ஆட்கொள்ளப்பட்டார். கனிவுடன் ஞான உபதேசம் செய்யப்பட்டார். ஞானம் கைகூடிய குருபரர் தம் குருநாதரிடம் அளப்பரும் பக்தி கொண்டார்; உணர்ச்சி வயப் பட்டார். அவருடைய தமிழ் உள்ளம் குருபக்தியால் நெகிழ்ந்தது. ஞான உபதேசம் செய்து, முத்தி நெறிக்கு வழிகாட்டிய ஞானப் பெருந்தலைவருக்கு என்ன கைம்மாறு செய்ய இயலும்? செய்ந்நன்றி அறிதல் பற்றிப் பேசும் வள்ளுவர், தமக்குற்ற துன்பத்தை நீக்கியவருடைய நட்பினை, எழுவகைப் பிறப்பினும் மறவாமல் நினைப்பர் நல்லோர் என்ற பொருளில்,

> ''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் - தங்கள்
> விழுமம் துடைத்தவர் நட்பு.''

என்று பாடுவார். வள்ளுவர் அடிச்சுவட்டில் நீதிநெறி விளக்கம் பாடிய குருபரர், ஞான உபதேசத்தால், தம் பிறவிப் பிணியை நீக்கியருளிய குருநாதருக்குத் தம் நன்றியுணர்வைப் புலப்படுத்த 'பண்டார மும்மணிக் கோவை' என்னும் கவியாரத்தைக் காணிக்கையாக்கினார்.

எல்லாம் வல்ல சிவபரம்பொருளே மானிட வடிவுதாங்கி, குருநாதராய் எழுந்தருளியதாக உளமார எண்ணி,

> ''கருணைபூத் தலர்ந்த கமலக் கண்ணனும்
> அஞ்சிறைச் சுதைநிறச் செஞ்சூட் டன்னமும்
> செம்மயிர்க் கருங்கண் வெள்ளெயிற் றேனமும்
> ஆகுபு தனித்தனி அலமர நிவந்த
> மீகெழு பரஞ்சுடர் வெளிப்பட டம்ம
> எம்மனோர் போல இனிதெழுந் தருளிக்
> கைம்மா றற்ற கணக்கில் பேரின்ப
> மோனவாழ் வளிக்கும் ஞான தேசிகன்''

என்று பாடும் போதும், அன்பு பெருகக் குருநாதரை,

"நான்மறைக் கிழவ! நற்றவ முதல்வ!
நூன்முறை பயின்ற நுண்மைசால் அறிஞ!
சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞ!
கற்றவர் வியக்கும் காவியப் புலவ!
செவிதொறும் செவிதொறும் தெள்ளமு தூட்டுபு
கவிஞர்வயின் நிரப்பும் கல்விப் பிரசங்க!"

என்று விளித்து உருகும் போதும், குருபரருடைய குருபக்தி நிறைந்த தமிழ் உள்ளத்தை நன்கு புரிந்து கொள்ளலாம். அறிஞர், கவிஞர், புலவர், சொற்பொழிவாளர் என்றெல்லாம் பாராட்டிப் பாடினாலும், குருநாதர் வழங்கியது, கைம்மாறற்ற பேரின்ப மோனவாழ்வென்று சுட்டுவது, குருநாதர் வழங்கியதன் பெருமையைப் புலப்படுத்துவதாகும். காலத்தை வென்று நிலைத்து நிற்கும் இக்கவிதைக் காணிக்கை, குருபக்தியால் உருகிய குருபரரின் தமிழ் உள்ளத்தின் மேன்மைக்குச் சான்றாக ஒளிவீசித் திகழ்கின்றது.

கவிதை நாட்டம்

பக்தி உணர்வும், ஞானச் சிந்தனையும் ஆட்டிப் படைப்பினும் அடிப்படையில் அவர் ஒரு கவிஞரே! தாம் ஒரு கவிஞர் என்ற உணர்வு மேலோங்கி இருந்திருக்கிறது. நான்முகன் படைக்க வெற்றுடம்பு மாய்வன; ஆனால் கவிஞன் படைக்கும் கவிதைப் படைப்பு அழியாமல் நிற்கும் என்ற பொருளில்,

"கலைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு."

என்று பாடிக் கவிதைப் படைப்பின் சிறப்பைப் புலப்படுத்துவது

நோக்கத்தக்கது. இறைவனையும் கவிதை பாட வைத்த தமிழ்ச் சங்கம் திகழ்ந்த பாண்டிய நாட்டில் பிறந்தவருக்குக் கவிதை நாட்டம் இருப்பது வியப்பன்று.

அய்ந்து வயதில் ஆறுமுகக் கடவுள் அருள்பெற்றுப் பாடத் தொடங்குகிறபோது,

''ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும் - ஓசை
எழுத்துமுத லாம்அய்ந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து.''

என்று வேண்டுகிறபோது கவிதை நாட்டம் வெளிப்படுகிறது தருமபுரம் சென்று ஞானச் செல்வர் மாசிலாமணித் தேசிகர் திருவருள் பெற்றுத் தவக் கோலம் மேற்கொண்ட பிறகும் கவிதை நாட்டம் இருந்தது என்பது வியப்பிற்குறியதல்லவா!

''நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்''

''பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்''

''பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும்என்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காய்''

''சொல்விற் பனமும் அவதான மும்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந் தடிமைகொள் வாய்''

என்று கலைமகளை வேண்டுவதிலும் குருபரருடைய கவிதை யார்வம் வெளிப்படுகிறது. "அவிச்சுவையினும் கவிச்சுவை இனிது;

கவிச்சுவையினும் தவச்சுவை இனிது" என்பர். தவச்சுவை உணர்ந்தும் கவிச்சுவையில் நாட்டம் இருந்ததற்குக் காரணம் யாது? உள்ளம் தமிழ் உள்ளமாக – இலக்கிய உள்ளமாக இருந்ததுதான் காரணம்.

அவர் பாடியருளிய பற்பல அற்புதக் கவிதைப் படைப்புகள், கவிதை நாட்டத்தின் விளைவு எனலாம். கவிதை புனைந்ததுடன், கவிதைகளைப் படித்து, அவற்றை அனுபவிக்கும் ஆர்வமும், ஓர் இலக்கியவாதி என்ற அடிப்படையில், அவர் உள்ளத்தில் பெருக்கெடுத்துள்ளது. சைவத் தொண்டாற்றிய குருபரர், காசியில், கம்பராமாயணச் சொற்பொழிவாற்றினார் என்ற செவிவழிச் செய்தி ஒன்று உள்ளது. கம்ப ராமாயண நாட்டம் கவிதைநாட்டமல்லாமல் வேறு என்ன நாட்டமாக இருக்க இயலும்?

கவிதை நாட்டத்திற்கு இன்னொரு காரணம், இறைவன் திருவருளைப் பெற்றுத் தரக் கூடியது கவிதை என்ற எண்ணமும் ஆகும். "எம்கவிதை கொண்டு ஆட்கொண்ட காசிநாதர்" என்ற காசிக் கலம்பகக் கவிதைத் தொடர் அதனை மெய்ப்பிக்கும். குருபரருடைய சிற்றிலக்கியங்களைத் தொகுத்த உ.வே.சா. அவர்கள் "கவிதை பாடி இறைவன் திருவருளைப் பெறுதல் எளிது என்பது இவருடைய கொள்கை" என்று எழுதுவது இவண் சிந்திக்கத் தக்கது.

கல்வியில் ஈடுபாடு

இறையருளால் அறிவு வந்தது; கவிபாடும் ஆற்றல் வந்தது. எனினும் மேலும் மேலும் நூல்பல பயில வேண்டும் என்ற எண்ணமும் வளர்ந்தது. உண்மையான தமிழ் உள்ளம் கற்றது போதுமென்று நினைக்காது.

''கற்றதுகைம் மண்ணளவு; கல்லா(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்''

என்று பாடியது ஒரு தமிழ் உள்ளம்.

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

என்று எழுதிக் கல்வியே சிறந்த செல்வம் என வள்ளுவர் புலப்படுத்துகிறார். கல்வியே சிறந்த அழகு என்ற கருத்தில்,

''குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நட்பு நிலைமையால்
கல்வி யழகே அழகு''

என்று நாலடிச் செய்யுள் அறிவுரை வழங்குகிறது. வாழையடி வாழையென வந்த தமிழ்க்கவிஞர் பரம்பரையில் தோன்றிய குருபரர்க்கும் கல்விபற்றிய சிந்தனையும் ஈடுபாடும் அதிகம். அதனால்தான் கலைவாணியிடம்,

''தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.''

என்று பாடிக் கல்வியை வேண்டுகின்றார். அந்தக் கல்வி நாட்டமே,

''அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறும்கவ லொன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.''

> **''தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்**
> **மடங்கொன்(று) அறிவகற்றும் கல்வி - நெடுங்காமம்**
> **முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்**
> **பிற்பயக்கும் பீழை பெரிது.''**

என்றெல்லாம் பாடி, நமக்கும் கல்வி நாட்டத்தை வளர்க்கத் தூண்டுகிறது. தொடங்குங்கால் துன்பமாய் இறுதியில் சீரிய இன்பத்தைத் தரும் கல்வி ஒன்றெ. மக்களுக்கு எவ்விதத்திலும் சிறந்த துணை எனவுணர்ந்து நமக்கு அறிவுரை கூறும் தமிழ் உள்ளத்தைப் புரிந்து கொண்டால் நலம் பயக்கும்.

கல்வியின் பயன்

கல்வியைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றும் இல்லை எனக் கூறிக் கல்வி கற்க அறிவுறுத்திய குருபரர், அக்கல்வியின் பயனையும் தெளிவுற விளக்கியுள்ளார்.

> **''எத்துணை வாயினும் கல்வி இடமறிந்(து)**
> **உய்த்துணர் வில்லெனின் இல்லாகும் - உய்த்துணர்ந்தும்**
> **சொல்வன்மை இன்றெனின் என்னாகும்? அஃதுண்டேல்**
> **பொன்மலர் நாற்றம் உடைத்து.''**

கல்வி எவ்வளவு பெரிதே யானாலும், இடமறிந்து, மதி நுட்பத்தால் ஆராய்ந்து, பொருள்கொள்ளும் உணர்ச்சி இல்லை யானால் அக்கல்வியறிவு இல்லையாகும்; பொருள் தெளிந்தாலும், பிறர்க்கு எடுத்துச் சொல்லும் திறமை இல்லையானால் என்ன பயனை உடையதாகும்? சுருக்கமாகச் சொன்னால், கல்வியறிவு, உய்த்துணரும் செயலால் பயன்படும்; சொல்வன்மையால் சிறப்படையும் என்பதாகும்.

கல்வியின் பயன், எந்தச் சபையிலும் நடுக்கமின்றிப் பேசுவதில் உள்ளது! கற்றவர்கள் கூடிய சபையில், தான் கற்றவற்றை எடுத்துரைப்பதில் ஒருவனுக்கு அச்சமும் நடுக்கமும்

இருந்தால் அக் கல்வியால் பயனில்லை. எது எது பயன் இல்லை என்று அடுக்கிக் கூறுகிற முறையில் இக்கருத்தை வலியுறுத்திப் பாடுகிறார் குருபரர்.

> "அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
> அவையஞ்சா ஆகுலச் சொல்லும் - நவையஞ்சி
> ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இல்நலமும்
> பூத்தலிற் பூவாமை நன்று."

என்பது பாடல். எதிர்மறையாகக் கூறி, தம் கருத்தைக் குருபரர் புலப்படுத்துகிறார் கவிஞர். ஈற்றடி கவிச்சுவை மிக்கது.

கற்றபடி ஒழுகுக

'கல்வி' என்ற அதிகாரத்தைத் தொடங்குகின்றபோது வள்ளுவர்,

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக."

என்று பாடுவார். கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்றிட வேண்டும்; கற்றபின், கற்ற நூல்களில் உள்ளவாறு நடக்க வேண்டும் என்று வலியுறுத்துவார். குருபரரும் கற்றபடி ஒழுகுதல் வேண்டும் என்பதை, உய்த்துணரத்தக்க நிலையில்,

> "கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம்நில்லார் வாய்ப்படூஉம்
> வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்
> நில்லாத தென்னென்று நாணுரைப்ப நேர்ந்தொருவன்
> சொல்லாமே சூழ்ந்து சொலல்."

என்ற செய்யுள்மூலம் விளக்குவார். கற்றறிந்து, கற்றபடி ஒழுகுதல் வேண்டும் என்று பிறர்க்குக் கூறி, தாம், அந்நெறியில் நடவா திருந்தால், "கற்றபடி நடக்க வேண்டும் என்று எமக்குக் கூறிய

நீங்கள் அவ்வாறு நடவாதிருத்தலின் காரணம் யாதோ?" என்று, முகத்தில் அடித்தாற்போல – வெட்கமுறும்படிப் பிறர் கேட்கும் சூழல் வரும் என்று உய்த்துணர வைக்கிறார் கவிஞர்.

அன்பு, இரக்கம், கருணை, ஈகை, ஒழுக்கம் பற்றி அதிகம் பயின்று மேடைதோறும் முழங்கும் பலர், அன்பின்றி நடப்பதையும், இரக்கமின்றி வட்டி வாங்கி, லஞ்சம் வாங்கிச் செயல்படுவதையும், ஒழுக்கமின்றி வாழ்வதையும், இந்நாளில் காணுட் போது, குருபரர் அறிவுரையின் அவசியம் புரியும் கருணையுடன் நடக்க வேண்டிய – கற்ற ஆன்மிகவாதிகள்கூடப் பணத்திற்காக மனச்சாட்சியைக் கொன்று புதைத்துவிட்டு அலைவதைப் பார்க்கும் போது, மீண்டும், கற்றபடி ஒழுகுக என்று அறிவுரை கூறக் குருபரர் பிறக்க மாட்டாரா என்று மனம் ஏங்குகிறது!

"சித்தர்களும் யோகிகளும்
சிந்தனையில் ஞானிகளும்
புத்தரோடு ஏசுவும்
உத்தமர் காந்தியும்
எத்தனையோ உண்மைகளை
எழுதிஎழுதி வச்சாங்க
எல்லாந்தான் படிச்சிங்க
என்னபண்ணிக் கிழிச்சிங்க"

என்ற பட்டுக்கோட்டையின் திரை இசைப்பாடல் நினைவிற்கு வருகிறது.

இளகிய மனம்

தமிழ் இலக்கியங்களிலே தோய்ந்த மனம் இளகியதாக – அருள் நிறைந்ததாக இருக்கும். இளகிய மனத்திலேதான் கவிதை இலக்கியம் பிறக்கிறது. காதலியைப் பிரிந்து, பணிமுடித்துத் திரும்பும் தலைவன், வழியில் தேன் அருந்தி வானில் மகிழும்

வண்டின் கூட்டம், தேரின் மணியோசை கேட்டு, அஞ்சிச் சிதறுமோ வென்று மனம் இளகி, தேரை நிறுத்தி, மணிகளின் நாவைக் கட்டிச் செல்வதைச் சித்திரிக்கும்.

> **“பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
> **தாதுண் பறவை பேதுறல் அஞ்சி**
> **மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்**
> **உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்”**

என்ற அகநானூறு போன்ற தமிழ் இலக்கியங்களிலே தோய்ந்த – கவிதைகளை வாழ்நாளெல்லாம் பாடிய குமரகுருபரர் உள்ளம் இளகிய உணர்வுடையதாகிறது. இளகிய அவர்தம் மனவுணர்வை அவருடைய படைப்புகள் மூலம் உணர்ந்து கொள்ளலாம். எதுவும் இல்லாமல் வாடுபவனுக்கு ஈவதையும், பிறர் இழைக்கும் இன்னலைப் பொறுத்துக் கொண்டு நன்மை செய்வதையும் அவர்தம் இளகிய மனம் வற்புறுத்துகிறது.

ஈதல் என்பது தமிழனின் உயர்ந்த பண்புகளில் ஒன்று. ஒரு பொருளைத் தாவென்று இரத்தல் இழிந்தது; அங்ஙனம் இரந்தோர்க்கு ஈயேன் என்று மறுத்தல் அதனினும் இழிவுடையது; ‘கொள்க’ வென்று ஒன்றைத் தானே விரும்பிக் கொடுத்தல் உயர்ந்தது என்பது தமிழனின் கொள்கை.

> ***“ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்***
> ***ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;***
> ***கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று...”***

என்பது புறநானூற்றுப் பாடல். “செல்வத்துப் பயனே ஈதல்” என்று நக்கீரர் பாடினார். ஈதல் என்று ஓர் அதிகாரமே வகுத்த வள்ளுவர், “மேல்உலகம் இல்லெனினும் ஈதலே நன்று” என்று அழுத்தமாகக் கூறிவிட்டு,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

என்று பாடினார். நாம் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய பாடல் இது.

தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் கொடுங்காட்டில் தங்கி வாடிய குமணன், தன்னிடம் பரிசில் வேண்டி வந்த பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் பெருமானிடம், தன் நிலைக்கு வருந்தி, தன் தலையைக் கொய்து சென்று, தன் தம்பியிடம் தந்தால் பொருள் தருவான் எனக் கூறி, வாளினைத் தந்து, தலையை அரிந்து செய்க என்று வேண்டினான் என்பது புறநானூற்றுச் செய்தி.

"சாதலின் இன்னாத(து) இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்பது தமிழ் உள்ளம்.

அதே சிந்தனையுடன், செல்வம் உள்ளவன் இல்லாதவனுக்கு ஈந்து வாழ் வேண்டும் என்று நீதிநெறி விளக்கத்தில் பாடுகிறார் குருபரர். எவை எவை தோன்றாமல் இருப்பது நல்லது என்று அடுக்கிக் கூறும்முறையில், "ஈத்துண்ணார் செல்வம்" என்று, பிறர்க்குக் கொடுத்து உண்ணார் செல்வத்தைச் சுட்டுகிறார் கவிஞர். "பூத்தலின் பூவாமை நன்று" என்ற அழகிய தொடரால், தம் செய்தியைக் கவிதையாக்குகிறார் புலவர். ஈந்து வாழ்க என்று நேரடியாகக் கூறாமல், "ஈத்துண்ணார் செல்வம்..... பூத்தலின் பூவாமை நன்று" என்று எதிர்மறையான தொடரால் புலப்படுத்தி இருப்பது, வெளியீட்டு உத்தியால் அழகு பெறுகிறது.

தீமை செய்தவர்க்கும் தீமை செய்யாமல் நன்மை செய்ய வேண்டும் என வள்ளுவர் பாடுவார்.

''இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.''

என்பது குறட்பா. தனக்குத் தீங்கு செய்தவர்களைத் தண்டித்த லாவது, தீங்கு செய்தவர்களே நாணித் தலைகுனியும்படி அவர் களுக்கு நன்மைகளைச் செய்து, அவர்கள் செய்த தீங்கினையும் தான் செய்த நன்மைகளையும் மறந்து விடுவதேயாகும் என்பது பொருள். இக்குறட்பாவில் தோய்ந்த குருபரரின் இளகிய தமிழ்மனம், இக்குறட்பாவாகிய இலக்கணத்திற்கு இலக்கியம் படைப்பது போல, ஓர் அழகிய கற்பனையைச் செய்கிறது. பாடல் திருவாரூர் நான்மணிமாலையில் உள்ளது. திருவாரூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் போற்றித் துதிப்பதாகக் கவிஞர் பாடியது திருவாரூர் நான்மணிமாலை.

''விண்தொட நிவந்த வியன்துகில் கொடிகள்
மண்தலம் போழ்ந்து மதியகடு உடைப்ப
வாணிலா அமுதம் வழங்கிஅக் கொடிகள்
வேனில் பயின்ற வெப்பமது ஆற்றுபு
கொடியார் எத்துணைக் கொடுமை செய்யினும்
மதியார் செய்திடும் உதவியை உணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதில் கமலைக்
கடிநகர் வைப்பினில் கண்டேம்''

என்பன கவிதை வரிகள். திருவாரூர் மாளிகைகளின் உச்சியிலே கட்டப்பட்ட கொடிகள், வானுலக நிலாவின் வயிற்றைக் கிழிக்க, அதிலிருந்து வழிந்த அமுதம், வெயிலால் உலர்ந்த அக் கொடிகளை நனைத்ததாம். இக்காட்சி கொடியவர்கள் எவ்வளவு கொடுமை செய்தாலும், அறிவுடையவர்கள் அவர்களுக்கு நன்மையே செய்வார்கள் என்பதை அறிவுறுத்தியதாம். கொடியார், மதியார் ஆகிய சொல்லாட்சிகள் அற்புதமானவைகள். இளகிய மனத்தின் வெளிப்பாடு இக்கவிதைக் கற்பனையாகும்.

இன்சொல்லாவது சொல்க

இளகிய மனமுடையவராய், வறியவர்க்குப் பொருள் ஈந்து வாழ வேண்டும் என்று அறிவுறுத்திய கவிஞர், இல்லாதார்க்கு பொருள் தந்து உதவாவிட்டாலும், இன்சொல்லாவது சொல்க என்று மறைமுகமாக வற்புறுத்துகின்றார். பிறர் மனம் நோகப் பேசாமல், இன்சொல் பேசுவது சிறப்பல்லவா!

> **''ஈகை அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்**
> **ஓஒ கொடிது கொடிதம்மா! - நாகொன்று**
> **தீவினைக் கம்மியனால் வாய்ப்பூட் டிடப்படின்மற்(று)**
> **ஆஆ இவரென்செய் வார்.''**

என்று நெஞ்சுருகிப் பாடுவார் குருபரர். இறப்போர்க்குக் கொடுக்கும் செயல் இல்லையேனும் இனிய சொற்களேனும் சொல்லாது ஒழிதல் முன்செய்த தீவினையே என்று வருத்தப் படுகிறார். நெஞ்சுவந்து ஒரு பொருள் ஈவதைவிடச் சிறப்பானது இன்சொல் பேசுவது என்ற கருத்தில்,

> **''அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து**
> **இன்சொலன் ஆகப் பெறின்.''**

என்று பாடுவார் வள்ளுவர். இக்குறட்பாவின் தாக்கம் குருபரரின் பாடல்!

தொண்டுள்ளம்

குருபரரின் தமிழ்உள்ளம் தொண்டுள்ளமாகப் பொலிகின்றது. இளகிய மனத்தில் தொண்டு புரிய வேண்டும் என்ற உணர்வு தோன்றுவது இயல்பு. தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் – தொண்டு செய்து வாழும் வாழ்வை அறிவுறுத்திய,

> **''உண்டால் அம்ம இவ் வுலகம்! இந்திரர்**
> **அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்**

தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!''

என்ற பாண்டியனின் புறநானூற்றுப் பாடலில் தோய்ந்த தமிழ் உள்ளம், தொண்டில் ஈடுபடாதிருக்க முடியுமா! தொண்டு என்ற பண்பின் வரலாறு என்று போற்றப்படும் பெரியபுராணம் விவரிக்கும் அடியார்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுப் பாடும் குருபரரின் தமிழ் உள்ளம் தொண்டு புரிவதை நாடாதிருக்க இயலுமா? பிறர்க்குத் தொண்டு செய்து வாழும் தமிழர் பரம்பரையில் தோன்றிய அவர் தொண்டராக வாழ்ந்து வழிகாட்டினார். அவர் ஆற்றிய தொண்டு இரண்டாக அமைகின்றது. ஒன்று சைவசமயத் தொ ண்டு; மற்றொன்று தமிழ்த் தொண்டு.

இனமும் மொழியும் வேறுபட்ட காசி சென்று, பழு தடைந்திருந்த கேதாரநாதர் திருக்கோயிலை, அரசன் உதவியுடன் புதுப்பித்து, ஆகமவிதிப்படிக் குடமுழுக்கு செய்த சிவத்தொண்டு மறக்க முடியாதது. சைவர்களுடைய உள்ளத்தையெல்லாம் குளிர்வித்த தொண்டிது. ஈகைபற்றிப் பாடிய புலவர் பெருமகனார், திருமடம் ஒன்றைக் காசியில் நிறுவி, அன்னதானமும் ஞான தானமும் செய்தது. வணக்கத்திற்குரியது. வடபுலத்தில் சைவ சமயம் நன்கு வளர்ந்தமைக்குக் குருபரர் ஆற்றிய பணிகள் காரணம் எனில் மிகையாகாது. குருபரர் நிறுவிய மடம், இன்றும், குருபரர் பணியைத் தொடர்ந்து செய்வது பாராட்டுக்குரியது. மாநாடுகள் நடத்தி, சைவசமயச் சிறப்பையும், தமிழின் பெருமையையும், தற்போது, காசித்திருமடத்தின் அதிபர் அவர்கள் புலப்படுத்திக் கொண்டிருப்பது, நீள நினைத்துப் போற்றத் தக்கது.

இசுலாமிய மன்னன் ஷாஜஹான் மகன், காசியில் நடத்திய சர்வ சமய மாநாட்டில், குருபரர் கலந்து கொண்டு சைவசமயத்தின் சிறப்புக்களையெல்லாம் எடுத்துரைத்து, நுட்பங்களையெல்லாம் விரித்துரைத்து, அனைவரும் உணரும் வண்ணம் தெளிவுறுத்திய சைவசமயத் தொண்டும் மிகப் பெரிது. பிற சமயத்தைச் சார்ந்த மன்னன் மகன் நடத்திய சமய மாநாட்டில், நெஞ்சுரத்தோடு கலந்து கொண்டு, தென்கோடித் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு கவிஞர், தம் சமயத்தின் சிறப்புக்களையும் மெய்ம்மைகளையும் புலப்படுத்துவது என்பது சாதாரணமானதன்று. செந்தில் ஆண்டவன் கருணையே அவருக்குத் துணையாக நின்றது.

அவர் பாடியருளிய சிற்றிலக்கியங்கள் எல்லாம் தமிழ்த் தொண்டின் அடையாளங்கள் எனலாம். 'தமிழ் வாழ்க' என்று வெறுமனே சொல்லிக் கொண்டிருப்பதில் தொண்டு ஏது? அழியாத பனுவல்களைப் பாடித் தருவதுதான் சீரிய தொண்டாகும். அவ்வகையில் அவர் மிகப் பெரிய தொண்டராவார்.

தொண்டராக வாழ்ந்த புலவர், தொண்டர்களோடு வாழவே ஆசைப்பட்டார்; வேண்டினார்.

''சிற்றடி யவர்க்கே குற்றேவல் தலைக்கொண்(டு)
அம்மா கிடைத்தவா வென்று
செம்மாப் புறூஉம் திறம்''

என்ற மதுரைக் கலம்பகம் பாடல்வரிகளும்,

''ஒழுக்கம் நிறைந்த விழுப்பெரும் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக''

என்ற சிதம்பர மும்மணிக்கோவைக் கவிதை வரிகளும் அவர் மனத்தை அடையாளம் காட்டுபவை!

பொருளீட்டல்

மனித வாழ்வில் பொருள் என்பது அவசியமானதாகும். பொருள் இல்லையெனின் அறமும் இல்லை; இன்பமும் இல்லை. அறம் செய்வதும் இன்பம் துய்ப்பதும் தானே மனித வாழ்வு. அதனால்தான்,

> **"அருள்இல்லார்க் கவ்வுலகம் இல்லை**
> **பொருள்இல்லார்க்(கு)**
> **இவ்வுலகம் இல்லாகி யாங்கு."**

என்று வள்ளுவர் பாடினார். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது எத்துணை சரியானது என்பதை நடைமுறை வாழ்வை உணர்ந்தவர் அறிவர்.

வெற்றி, கல்வி, பெருமை, அழகு அனைத்தையும் தருவது கல்வி என்பார் திருத்தக்க தேவர். பொருள் இருப்பின் கிட்டாதன இல்லை என்றும் கூறுவார் அவர். பல்லாண்டுகள் கழித்து, தான் ஈன்றெடுத்த மகன் சீவகனை நேரில் கண்ட விசயை, பொருளின் அருமையை மகனுக்குக் கூறுவதாக,

> **"வென்றி யாக்கலும் மேதக ஆக்கலும்**
> **குன்றி னார்களைக் குன்றென ஆக்கலும்**
> **அன்றி யும்கல்வி யோடழ காக்கலும்**
> **பொன்துஞ் சாகத்தினாய் பொருள் செய்யுமே."**

> **"பொன்னின் ஆகும் பொருபடை யப்படை**
> **தன்னின் ஆகும் தரணி தரணியிற்**
> **பின்னை யாகும் பெரும்பொருள் அப்பொருள்**
> **துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே."**

என்று பாடினார் திருத்தக்க தேவர். நல்ல கல்வி பெறுவதற்கும் பணம், பணிபெறுவதற்குப் பணம், நல்ல மருத்துவர் சிகிச்சை

செய்து கொள்வதற்குப் பணம் என்று அனைத்திற்கும் பணம் என்று ஆகிவிட்ட சமூகத்தில் உள்ள இன்றைய மனிதன் தேவரின் பாடலை உணர்ந்து கொள்வான்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குருபரர் பொருள் அருமையை உணர்ந்தவர். தொண்டர்களோடு இருக்கவும், தொண்டுபல புரியவும் விரும்பிய மிகப் பெரிய தொண்டராகிய குருபரர் பொருளீட்டல் பற்றி நமக்கு அறிவுறுத்துவது நோக்கத் தக்கது.

''தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
ஒத்த கடப்பாட்டில் தான்ஊன்றி- எய்த்தும்
அறங்கடையில் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.''

என்பது குருபரர் நீதிநெறிவிளக்கப் பாடல். வாழ்விற்குத் தேவையான பொருளை அறவழியில் ஈட்ட வேண்டும் என்பது குருபரர் அறிவுரை. பொருள் தேவை என்பதற்காக அறமல்லாத குறுக்கு வழியில் சென்று பொருள் தேடாதே என்று அறிவுறுத்து கிறார் கவிஞர். அத்துடன்,

''இடைதெரிந்(து) அச்சுறுத்து வஞ்சித்து எளியார்
உடைமைகொண்(டு) ஏமாப்பார் செல்வம் - மடநல்லார்
பொம்மன் முலைபோல் பருத்திடினும் மற்றவர்
நுண்ணிடைபோல் தேய்ந்து விடும்.''

என்று பாடுவார். அறவழியில் ஈட்டாமல், வஞ்சனையால் ஈட்டப்படும் பொருள் நிலைக்காது அழிந்துவிடும் என்று எச்சரிப்பது இப்பாடல். அறவழியே குருபரரின் உள்ளமாகும். குறுக்கு வழியில் செல்லும் இன்றைய சமூகம் சிந்தித்துப் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

அடக்கம்

செந்திலாண்டவன் அருளால் நிறைபுலமை பெற்றவர் குமரகுருபரர். அவர், அய்ந்து வயதிலேயே ‘கந்தர் கலிவெண்பா’ என்னும் ஞாலம் புகழும் ஞானப் பனுவலை இயற்றியவர்; மிகச் சிறுவயதிலேயே பிள்ளைத்தமிழ் பாடிப் பேரும் புகழும் பெற்றவர்; அன்னை அங்கயற்கண்ணியின் சந்தனக் கரங்களால் முத்து மாலையைப் பரிசாக அணிவிக்கப் பெற்றவர். ஆனால்,

> *‘‘எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்*
> *செல்வர்க்கே செல்வம் தகைத்து.’’*

என்னும் குறளுக்கு இணங்க அவர்தம் தமிழ் உள்ளத்தில் அடக்கம் குடிகொண்டிருந்தது; செருக்கு என்பதே இல்லை. அதனால்தான் தம் இனிய – அரிய கவிதை மொழிகளைச் “சிறிய எனது புன்மொழி” எனவும் “என் பொருளில் புன்மொழி” எனவும் கூறிக் கொள்கிறார். கல்வித் தேவதையாகிய கலைமகளும், சங்கத்திருந்து செந்தமிழ் ஆய்ந்த கந்தவேளும், ஞாலம் புரக்கும் பரம்பொருளாகிய அங்கயற்கண்ணியும் விரும்பிக் கேட்கும் வண்ணம் கவிதை பாடிய குருபரரின் அடக்கவுணர்வை என்னென்று சொல்வது?

உலகம் புகழும் மாபெரும் காவியம் பாடிய கவிச் சக்கரவர்த்தி கம்பர்,

> *‘‘ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு*
> *பூசை முற்றவும் நக்குபு புக்கென*
> *ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றில்*
> *காசில் கொற்றத்(து) இராமன் கதையரோ.’’*

என்று பாடியதை யொத்தது, குருபரர் அடக்க வுணர்வு; வாக்குப் பலிதம் கொண்ட பொய்யா மொழிப் புலவர்,

"அறம்உரைத் தானும் புலவன்முப் பாலின்
திறம்உரைத் தானும் புலவன் - குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனில்"

என்று உரைத்ததைப் போன்றது குருபரர் கொண்ட அடக்கம்; அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும் அறியென இமைப் பொழுதில் கந்தவேள் அருள, ஞானமும் புலமையும் பெற்ற அருணகிரிநாதர்,

"ஏது புத்திஅய் யாஎ னக்குஇனி
யாரை நத்திடுவேன்"

என்று பாடியதை ஒத்தது, ஓதாதுணர்ந்த குருபரர் அடக்கவுணர்வு! தாம் செருக்கின்றி அடங்கி இருந்தமையால்தான் "கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் உடையவர்க்கு அழகு, அவை இல்லாதவரிடத்துப் பணிவுடன் இருத்தல்" என்ற பொருளில் நமக்கு,

"கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும் - இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்."

என்று பாடிப் பணிவை வற்புறுத்துகிறார் கவிஞர் குருபரர். வற்புறுத்துவதுடன் "இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் அறிந்தவர் எவரும் இல்லை. எனவே எல்லாவற்றையும் கற்றுவிட்டோம் என்று ஒருவர் செருக்கு அடையவேண்டாம். ஏனெனில் சின்னஞ்சிறிய உளியினால் மலையில் உள்ள பெரிய பாறைகளும் உடைபடும்" என்ற பொருளில்,

''முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க - சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.''

என்று பாடி, பணிவு இல்லையானால் அடக்கப்படுவது உறுதி எனவும் அறிவுறுத்துகிறார். அவருடைய தமிழ் உள்ளத்தைப் புரிந்து கொண்டு நாமும் அவ்வழியில் நடந்தால் நன்மை பெருகும்.

தற்புகழ்ச்சி விரும்பாமை

தன்னையே புகழ்ந்து கொண்டு திரிபவர் பலர். அங்ஙனம் திரிபவரைக் கண்டால் 'சுயபுராணம்' என்று கேலி பேசி நல்லவர்கள் அகன்று விடுவார்கள். அழகழாக நீதிகள் கூறிய அவ்வையார்,

''வான்குருவி யின்கூடு,
வல்லாக்கு, தொல்கறையான்,
தேன்சிலம்பி யாவருக்கும்
செய்யரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே என்று
வலிமைசொல வேண்டாம்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்(று)
எளிது''

எனத் தற்புகழ்ச்சி வேண்டாம் என்று பாடினார். 'தூக்கணாங் குருவியின் கூடு, உறுதியான அரக்கு, பழமைகொண்ட கறையான் புற்று, தேன்கூடு, சிலந்தியின் வலை ஆகியவை யாருக்கும் செய்வதற்கு அரிதானவை. ஆதனால் யாம் பெரிதும்; வல்லமை உடையோம் என்று தற்பெருமை பேசிட வேண்டாம்; ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொன்று எளிது' என்று அழகாகப் புலப்படுத்தி யுள்ளார் அவர். தற்புகழ்ச்சி தாழ்வைத் தரும் என்பதை வில்லி புத்தூரார் " தன்னுடைப் பெருமிதத்தினை வியந்தவர் தாழ்ந்து, மன்னுயிர்க் கொகை நகைகர வருங்கவர் கண்டீர்" என்று பாடினார்

குருபரரின் தமிழ் உள்ளம் தற்புகழ்ச்சியை வெறுத்தது இறையருளால் சகல ஞானம் கைகூடியும், பெரும்புலமை எய்தியும் தற்பெருமை அவர் உள்ளத்தில் இல்லை.

''தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் - தன்னை
வியவாமை அன்றே வியப்பாவ(து) இன்பம்
நயவாமை அன்றே நலம்.''

என்று பாடினார். தண்ணீரால் விளக்கை அவித்தபோது இருளும் சூழ்தல் போலத் தற்புகழ்ச்சியினால் முன்னிருந்த புகழ் அழியும் போது இகழ்ச்சியும் உண்டாகும் என்று தெளிவுறுத்துதல் சிந்திக்கத்தக்கது.

சான்றோரது அறச் செயல்கள் கூட, தற்புகழ்ச்சியால் பயனற்றவையாகிவிடும் என்று எச்சரிக்கின்றார் கவிஞர்.

''விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையும் தீதே - புலப்பகையை
வென்றனம் நல்லொழுக்கில் நின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்.''

என்ற பாடல் மனங்கொளத்தக்கது. தற்புகழ்ச்சியில் நிற்போர் மறக்கக் கூடாத பாடல் இது.

தியாகராசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட திருவாரூர் நான்மணிமாலையில்,

''நின்பெருந் தன்மை நீயே நவிற்றுதல்
மன்பெரும் புலமைத் தன்றே''

என்று பாடுவதும் நோக்கத் தக்கது. திரைப்படவுலகில் நான்கு

பாடல்கள் எழுதிப் புகழ்பெற்றதும், 'கம்பனையே வென்றேன்' என்று முழங்குவோர் நினைவிற் கொள்ள வேண்டும் குருபரர் உணர்வை!

தாழ்ச்சி சொல்லாதே

தற்புகழ்ச்சியை விரும்பாத குருபரர் உள்ளம் தாழ்ச்சி சொல்லாதே என்றும் கூறியது. பிறர்மனம் புண்படும்படியாகத் தாழ்ச்சி சொல்வது நல்லதன்று. கணியன் பூங்குன்றனார்,

> **''பெரியோரை வியத்தலும் இலமே**
> **சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே''**

என்று பாடினார். இக்கருத்து குருபரர் உள்ளத்தில் இருந்தும்,

> **''பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்**
> **மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர்பிறர்**
> **சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து**
> **யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.''**

என்று வெளிப்படுகிறது.எவரையும் தாழ்ச்சி சொல்லாமல் இருப்பதை, எந்தச் சூழலிலும் மறவாமல் நோற்க வேண்டிய நோன்பாகவே கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

தன்மானம்

அடக்கமாக இருக்க வேண்டும்; ஆனால் தன்மானத்தை விட்டுவிடக் கூடாது; சுயமரியாதையை இழந்து விடக் கூடாது என்று நினைத்தது கவிஞர் குருபரரின் தமிழ் உள்ளம். தன்மானத்தை இழக்காத - பீடு நடை கொண்ட பழந்தமிழ்ப் புலவர்களின் மானவுணர்வு இவர்தம் தமிழ் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

> **''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
> **உயிர்நீப்பர் மானம் வரின்.''**

''இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு(து) ஏத்தும் உலகு.''

முதலிய குறட்பாக்களும்,

''மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே''

என்ற இனியவை நாற்பது தொடரும், தமிழ் இலக்கியங்களிலே தோய்ந்த – தன்மானம் மிக்க உள்ளத்தில் ஒளித்துக் கொண்டிருந்தது.

கடிய நெடுவேட்டுவன் பரிசில் நீட்டித்த போது, கவிஞர் பெருந்தலைச் சாத்தனார்,

''முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பின்றி ஈதல் யாம்வேண் டலமே''

என்று பாடியதை, அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் நீட்டித்த போது ஔவையார்,

''கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்அறி யலன்கொல்? என்னறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே!''

என்று கோபப் பட்டதை, கண்டு பாராட்டி அளிக்காது, பரிசில் மட்டும் கொடுத்தனுப்பினான் அதியமான் என்றதும்,

''காணாது ஈத்தஇப் பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்
தினைஅனைத் தாயினும் இனிதவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே''

என்று புலவர் கோமான் பெருஞ்சித்திரனார் சினங்கொண்டு புகன்றதைக் குருபரரின் தமிழ் உள்ளம் மறக்க முடியுமா? பகையரசர் அஞ்சி நடுங்கும் அத்தாணி மண்டபத்தில் தன்மானம் மிக்க தமிழ்ப்புலவர்கள் அண்ணாந்து தலைநிமிர்ந்து நடப்ப தல்லவா வழக்கம்!

''எங்கோன் இருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல இடையின்று குறுகிச்
செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்
என்மன வாழ்க்கை இரவலர்க் கெளிதே''

என்பதல்லவா மாடலன் மதுரைக்குமரன் பாடிய புறநானூற்றுப் பாடல்! பல்லவ மன்னன் அழைத்துவரப் பணித்ததும்,

''நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோம் அல்லோம்!''

என்று தாண்டகவேந்தர் நாவுக்கரசர் பாடியதும், சோழ மன்னனிடம் சினங்கொண்டு,

''மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை ஓதினேன் - என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.''

''காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளிந்ததோ? - மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா? நீ - முனிந்தால்
இல்லையோ செங்கட்(டு) இடம்?''

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடியதும் குமரகுருபரர் காதுகளில் கேட்டுக் கொண்டே இருந்தது. அதனால்தான் நீதிநெறி விளக்கத்தில் தன்மானம்தான் முக்கியம் என்பதை உணர்த்த எண்ணி,

''தம்முடை யாற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக - பின்னர்
சிறுவரை யாயினும் மன்ற தமக்காங்(கு)
இறுவரை இல்லை எனின்.''

என்று பாடினார். நமது உடல் நிலையற்றது; அதனால் அதன் அழிவுக்கு அஞ்சாமல் மானத்தைக் காப்பதே சிறப்பு என்று உறுதியாக வற்புறுத்தியது அவர்தம் உள்ளம். உயிருக்கும் மேலானது மானம் என்பதை அவர்தம் தமிழ் உள்ளம் நமக்கு அறிவுறுத்துகின்றது. தென்தமிழ் நாடாண்ட திருமலை நாயக்கரிடமும், வடபுலமாண்ட இசுலாமியப் பேரரசரிடமும் பழகிய எக்காலத்திலும், சுயமரியாதைச் சிங்கமாகவே அவர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

''மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண்ட டளவில் பணியச்செய்
வாய்''

என்ற பாடல் வரிகள் அவரை, மானம்மிக்க கவிஞராக இனம் காட்டுவனவாகும். தமிழ் இலக்கியம் முறையாகப் பயின்ற எவர்

உள்ளமும் மானத்தை இழந்துவிடச் சம்மதிக்காது. பணத்துக் காகவும், பதவிச் சுகத்துக்காகவும் எவர் காலிலும் விழுவதற்கு விரும்பாது. பொருள் பெற வேண்டும் என்றால், கைகட்டி வாய் பொத்தி நிற்க வேண்டும் என்று சொன்னவுடன்,

"எங்கும் புதையா(து) இலங்குதமிழ்ப் பாடலெனு
பொங்கு மதுரம் பொழியும்வாய் - நங்குகவேள்
இன்னருள் செய்யான் எனினும்எழிற் கேரளத்து
மன்னனிடம் போய்ப்புதைக்கு மா?"

என்று பாடிய, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் செந்தமிழ்ப் பாடலை எந்தப் புலவன் மறப்பான்?

ஒழுக்கம்

மானத்துடன் வாழக் கடைப்பிடிக்க வேண்டியது ஒழுக்கம். ஒழுக்கம் தவறிடின் மானம், மரியாதை எல்லாம் போய் விடும். கும்பகர்ணன் இராவணனை,

"பேசுவது மானம்; இடை பேணுவது காமம்"

என்று இடித்துரைத்தது போல இடித்துரைக்க நேரிடும். அதனால்தான் ஒழுக்கத்தின் இன்றியமையாமை, வள்ளுவர்,

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி."

என்று பாடிப் புலப்படுத்தினார் புலனழுக்கற்ற அந்தணராகிய கபிலர்,

''முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நோவரும் குரைய நலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி யையர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொன்மருங் கறிஞர்''

என்று பாடி வற்புறுத்தினார். முத்தும் மணியும் பொன்னும் கொண்டு செய்த மாலை அழுக்குப் படினும் அல்லது அறுந்துவிடினும், அதனைப் பின்னும் திருத்திச் செப்பனிட்டுக் கொள்ளலாம்; ஆனால் தத்தம் குலத்திற்கேற்ற குணங்களின் இயல்பும், மேம்பாடும் ஒழுக்கமும் கெட்டுவிட்டால், அவற்றின் அழுக்கைக் கழுவி முன் போலப் புகழை விளங்கும்படி செய்தல் எத்தகைய மேலோர்க்கும் இயலாததாகும் என்பது பொருள். எனவே, தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் – ஒரு ஞானக் கவிஞராய் வாழவேண்டும் என்று விரும்பிய குருபரரின் தமிழ் உள்ளம் ஒழுக்கத்தின் மேன்மையை உணர்ந்து, அதனை விடாமல் கடைப்பிடித்தது; நமக்கும் அறிவுறுத்தியது. துறவிகளும் இல்லறத்தாரும் ஒழுக்கம் உடையவர்களாக வாழ வேண்டும் என்று வற்புறுத்தியது.

"பெண்விழைவார்க் கில்லை பெருந்தூய்மை" என்ற அறநெறிச்சாரக் கருத்தை மறவாத குருபரரின் தமிழ் உள்ளம், துறவறம் மேற்கொள்பவர் இயல்பை வருணித்து, அவர்கள் ஒழுக்கத்தை வரையறுத்துக் கூறுவது சிறப்பானது; மனங் கொளத்தக்கது.

''பெண்மை வியவார்; பெயரும் எடுத்தோதார்;
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார் – பண்ணொடு
பாடல் செவிமடார்; பண்பல்ல பாராட்டார்;
வீடில் புலப்பகையி னார்.''

என்பது பாடல். 'அய்ந்து புலன்களுக்கும் பகைவரான துறவிகள்

பெண்மையை வியந்து பேச மாட்டார்கள்; பெண் என்னும் பெயரையும் சொல்லமாட்டார்கள்; நெஞ்சத்தில் வடிவம் பதியும் வண்ணம் தங்கள் விழிகளால் பெண்களைப் பார்க்க மாட்டார்கள்; பெண்கள் இசையுடன் பாடும் பாடல்களைக் கேட்க மாட்டார்கள்; நற்பண்பு இல்லாத பெண்களின் மற்றச் செயல்களையும் பாராட்ட மாட்டார்கள்' என்று கூறி, துறவிகள் எப்படி இருப்பார்கள் என்று உய்த்துணர வைப்பது அருமையானது. பொன்னிலும் பிற பொருளிலும் சிக்காத துறவி, பெண் அழகில் சிக்கிவிடுவதால், அதனையே குறிப்பிட்டுக் கூறினார் கவிஞர்.

இல்லற வாழ்வில் உள்ளவன் ஒழுக்கத்தைப் பற்றிப் பாடுகிற போது, பிறன்மனை நோக்காத தூய்மையான ஒழுக்க நெறியைச் சுட்டிப் பாடுகிறார். தம் மனைவியை விட்டுப் பிறன் மனைவியை விரும்பும் தீயவர், இனியசுவைப் பொருளைத் தின்னாமல், கைப்புள்ள பொருளைத் தின்னும் மிருகத்தை ஒத்தவர் என்று கடுமையாகப் பேசுகின்றார் கவிஞர்.

> **"திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்**
> **பிறன்மனைக்கே பீடழிந்து நிற்பர் - நறுவிய**
> **வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்**
> **தீய விலங்கிற் சிலர்."**

என்பது குருபரர் கவிதை. பிறன் மனைவியை விரும்புபவன் தீய விலங்கு எனக் கூறுவதால், பிறன் மனைவியை நோக்காதவன் நல்ல மனிதன் என்பதை உய்த்துணர வேண்டும்.

திரைப்படங்களாலும், தொலைக்காட்சித் தொடர்களாலும் பண்பாட்டுச் சீரழிவில் சிக்கித் தடுமாறும் இன்றைய சமுதாயம், குருபரரின் ஒழுக்கம் பற்றிய கவிதைகளை அவசியம் பயின்று சிந்திக்க வேண்டும். நினைத்துப் பார்க்கவும் கூசுகின்ற கதைகளைக் கூறுகின்ற மனவியாதிக்காரர்கள் குருபரரின் ஒழுக்கக் கோட்பாட்டை ஒரு கணமேனும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அறிவுரைகள்; எச்சரிக்கைகள்

தன்மானத்துடன் வாழவேண்டும்; ஒழுக்கத்துடன் வாழவேண்டும் என்று அறிவுறுத்திய குருபரர் தமிழ் உள்ளம், நம்மனோர் நலமுடன் வாழ, இனிது வாழச் சில அறிவுரைகளையும் எச்சரிக்கைகளையும் கொடுக்கின்றது. பீடுமிக்க தமிழ்க்கவிஞர் பரம்பரையில் தோன்றிச் செவ்வேள் பரம்பொருள் பேரருளால் ஓதாது உணர்ந்த ஞானத்தாலும், தமக்குமுன் தோன்றிய இலக்கியங்களிலே தோய்ந்து பெற்ற புலமையாலும் கூறும் அவர்தம் அறிவுரைகள் எச்சரிக்கைகள் நமக்கு இன்றியமையாதவையாகும்.

பகைநீக்கி வாழ்க

சாதாரண அலுவலகம் முதல் ஆட்சிநடத்தும் நிர்வாக அலுவலகம் வரை, மனிதன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அங்கே பணிபுரியும் அலுவலர்கள் சிறுபகையும் இல்லாது வாழ வேண்டியது அவசியமாகின்றது. பகையானது பிரச்சினையை உண்டாக்கிவிடும். விருப்ப ஓய்வு பெறுவோர் பலர், காரணம் கேட்டால், அலுவலகத்தில் தொல்லை தாங்க முடியவில்லை என்கின்றனர். சிறுசிறு பகையுணர்வே தொல்லைகளுக்குக் காரணமாகும்.

''பஞ்சினும் மெல்லி தேனும்
பகைசிறி தென்ன வேண்டா
அஞ்சித்தற் காக்க வேண்டும்
அரும்பொரு ளாக''

என்று திருத்தக்க தேவரும் சிந்தாமணியில் பாடுவார். குருபரரும் சிறுபகை எனினும் அதனை நீக்கி வாழ்க; இல்லையேல் தொல்லைவரும் என்று எச்சரிக்கையோடு அறிவுறுத்துகிறார்.

*"சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர் - நிறைகயத்
தாழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது"*

என்பது அவருடைய அறிவுரைக்கவிதை. அழகான உவமை கூறித் தம் கருத்தை வைக்கின்றார் கவிஞர். மிகுந்த ஆழம் கொண்ட – நீரை உடைய மடுவில், சிறிய தவளையொன்று குதித்தாலும், அம்மடுவின் கரையோரத்தில், அச்சமயத்தில் நிற்கும் யானை, தன் நிழலை, அம் மடுவின் நீரில் காண்பது அரிது. அதுபோல, தம் பகைகள் சிறியனவாய் இருப்பினும், அவற்றினின்றும், தம்மைக் காத்துக் கொள்வதை, உணர்ந்து அறியாதது மிகவும் அப்பகைகளால் பிழைபடுதலை உடையவராவர் என்று எச்சரிக்கையுடன் அறிவுரை கூறுகின்றார்.

ஆழமாகச் சிந்திக்க வேண்டிய அறிவுரை ஒன்றையும் கவிஞர் எச்சரிக்கையுடன் கூறுகின்றார்.

*"புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பங்காறும் காமப் பகை."*

புறப்பகையால் நிற்பாரைக் காட்டிலும் உப்பகையாய் நிற்பாருக்கு மிக அஞ்ச வேண்டும் என்று கவிஞர் விளம்புகின்றார்.

*"எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உப்பகை உள்ளதாம் கேடு."*

என்ற குறட்பாவில் தோய்ந்ததல்லவா குருபரர் தமிழ் உள்ளம்.

முயற்சியே வெற்றி தரும்

சிறுபகையும் இல்லாமல் எச்சரிக்கையாக வாழ்க என்று அறிவுறுத்திய அவர், எல்லாவற்றோடும் சமரசம் செய்து கொண்டு, எதிலும் முயற்சி செய்யாமல் இருந்துவிடக் கூடாது என்றும் பேசுகின்றார். இடைவிடாமல் முயற்சி செய்தால் கைகூடாத காரியங்களும் கைகூடும் என்று நினைக்கும் குருபரரின் தமிழ் உள்ளம், 'இறக்கும் நிலையில் இருக்கும் ஓர் உயிருக்கும், ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்தை வாயினுள் ஊற்றுதல், குற்றமன்று; ஒரு சமயம் அது நன்மையைச் செய்தலும் உண்டு; அதுபோலச் சில காரியங்கள் முதற்கண் முடியாதவை போலத் தோன்றிப் பின் விடாமுயற்சியின் காரணமாக முடிவனவும் உள; எனவே நன்மையைத் தருவனவாக மேற்கொண்ட முயற்சிகள் முடிவுபெறா விட்டாலும் இறக்கும் காலம் வரையிலும் விடாது முயல்க' என்று அறிவுறுத்துகிறது.

> ''உறுதி பயப்ப கடைபோகா வேனும்
> இறுவரை காறும் முயல்ப - இறுமுயிர்க்கும்
> ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல்
> ஆவனவும் உண்டு சில.''

என்பது அவர்தம் நீதிநெறி விளக்க வெண்பா, "அல்லனபோல் ஆவனவும் உண்டு சில'' என்பது அருமையான தொடர், நடைபெறாது என்றிருந்தோம்; நடைபெற்று விட்டது; நம் முயற்சி வெற்றியைத் தந்துவிட்டது என்று நாம் சில நேரங்களில் பேசுகிறோம் அல்லவா!

"அவரவர் விதிவழி அவரவர் வந்தனர்; அவரவர் விதிவழி அவரவர் அனுபவம்'' என்று பாடிய குருஞான சம்பந்தரின் ஞானபரம்பரையில் வந்த குருபரர், எல்லாம் விதிப்படியே நடக்கும் என்று கருதிச் சும்மா இராமல் முயற்சி செய்து பலன் பெறுக என்று பாடுகின்றார்.

‘‘முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா ஊழ்த்திறத்த என்னார் - மயலாயும்
ஊற்றம் இறுவிளக்கம் ஊழுண்மை காண்டுமென்(று)
ஏற்றார் எறிகான் முகத்து.’’

எண்ணெய் திரி முதலியன குறைந்ததனால் எரிவதற்கு வலியற்ற விளக்கு அவிந்துவிடுவதுதானே இயல்பு என்று கருதிக் காற்றடிக்கும் இடத்தில் ஏற்ற மாட்டார்கள்; அது சிறிது நேரமாவது எரியும் என்று எண்ணிப் பயன்பெற அதனைப் பாதுகாப்பார்கள். அதுபோல விதியின் வலியினை எண்ணிச் சும்மா இராமல் இயன்ற முயற்சி செய்து ஏற்ற பயனைப் பெறுவர் என்று விளக்குவதை எவர்தாம் ஏற்க மறுப்பர்?

“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்” என்று பாடிய வள்ளுவர் குறளில் தோய்ந்த கவிஞர் குருபரரின் தமிழ் உள்ளம், இடைவிடாது முயன்றால் விதியையும் வெல்லலாம் என்ற கருத்தை வலியுறுத்தி,

‘‘உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே - உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி.’’

என்று பாடி நம்பிக்கையூட்டுகின்றது. முயற்சியையே பற்றுக் கோடாகக் கொண்டு, விதியின் வலிமையை அழிக்கின்ற வலிமையும் உண்டு என்பதற்கு, விதியின் முனையை யழித்து, எமனது உயிரையே போக்குதற்குக் காரணமாய் இருந்த மார்க்கண்டேயன் என்னும் சிறுவனே சான்றாகும் என்று புலப்படுத்துவது மனம்கொளத் தக்கது. “பால்முளை தின்று மறலி உயிர் குடித்த” என்பது நயம் மிக்க தொடராகும்.

அளவறிந்து வாழ்க

முயற்சி பற்றி அறிவுறுத்திய கவிஞர், 'அளவறிந்து வாழ்க; இல்லையேல் பிச்சை எடுக்க நேரிடும்' என்று எச்சரிக்கின்றார். சமூகப் பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் மனத்திற் கொண்டு கற்பனை அழகோடு, தம் கருத்தைக் கூறுகின்றார் கவிஞர்.

"களிதூங்க அளவளவாய் வாழாமல் உண்ணமுது
கலையொடும் இழந்து வெறுமண்
கலத்திடு புதுக்கூழி னுக்கிரவு பூண்டொரு
களங்கம்வைத் தாய்இது"

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்க் கவிதைத் தொடரிது. நிலவு அளவறியாது வாழ்ந்த காரணத்தால், அமுதத்தையும் கலையை யும் இழந்து மண்கலத்தில் இடும் கூழுக்கு இரவு பூண்டு நிற்கின்றது எனச் சிலேடை யழகோடு பொருந்தக் கூறித் தம் கருத்தையும் வற்புறுத்துகின்றார் கவிஞர். அளவறிந்து வாழத் தெரியாது செல்வத்தையெல்லாம் இழந்து, உணவும் உடையும் இல்லாமல் பிறர் இடும் கூழுக்கு இரந்து நிற்கும் நிலையைக் கண்டதால் மனம் வருந்திய குருபரர், வாய்ப்பொன்றை ஏற்படுத்திக் கொண்டு, எச்சரிக்கையுடன் கூடிய அறிவுரையைக் கூறுகின்றார். இவ்வறி வுரையின் தாக்கம்தான்,

"ஆன முதலில்
அதிகம் செலவானால்
மானம் அழிந்து
மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய்
ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம்
நாடு"

என்ற அவ்வையின் நல்வழிப் பாடல் எனலாம்.

நட்பிடை வஞ்சம் வேண்டாம்

நம்பக் கூடாதவனை நம்பி, ஆட்சியை இழந்த சச்சந்தன் கதையைக் கூறும் காவியம் சீவக சிந்தாமணி. அதில் யார்யார் நரகத்திற்குப் போவார்கள் என்று பட்டியல் இடுகிறது ஒரு கவிதை. அக்கவிதை,

> ''நட்பிடைக் குய்யம் வைத்தான்
> பிறன்மனை நலத்தைச் சேர்ந்தான்
> கட்டழற் காமத் தீயில்
> கன்னியைக் கலக்கி னானும்
> அட்டுயிர் உடலந் தின்றான்
> அமைச்சனாய் அரசு கொன்றான்
> குட்டநோய் நரகந் தம்முட்
> குளிப்பவர் இவர்கள் கண்டாய்''

என்பதாகும். தொழுநோய் என்னும் நரகத்துள் கிடந்து துடிப்பவர்கள் பட்டியலில் முதலில் இருப்பது யார் தெரியுமா? நண்பனை வஞ்சித்தவன் ஆவான்! நண்பர்களால் ஏமாற்றப்பட்டு, துன்பப்பட்டு, கண்ணீர் விட்டு,

> ''கண்விழி சொரியும் உப்பு
> கடவுளால் வருவ தல்ல!
> மண்வழி வரலாம்! பெற்ற
> மகன்வழி வரலாம்! சேர்ந்த
> பெண்வழி வரலாம்! செய்த
> பிழைவழி வரலாம்! ஆனால்
> நண்பர்கள் வழியி லேதான்
> நான்கண்ட கண்ணீர் உப்பு''

என்று பாடியவர் கவிஞர் கண்ணதாசன்.

நண்பனை ஏமாற்றுவது – வஞ்சிப்பது அவ்வளவு கொடுமையானது. எனவே அதனைக் கடுமையாகப் பாடி, நட்பில் வஞ்சம் வேண்டாம் என்று குருபரர் அறுவுறுத்துகிறார்.

"நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் – திட்பமா
நாளுலந்த தன்றே நடுவன் நடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து."

என்பது அவர்தம் செந்தமிழ்ப் பாடல். நட்பில் வஞ்சனை செய் யாதே! வஞ்சனை செய்தால் ஆயுள் முடியும் முன்னே அழிவாய் என்று எச்சரிக்கையுடன் கூடிய அறிவுரையை வைக்கின்றார் கவிஞர்.

பெரியோர்களை இகழாதே

அறிவு ஆற்றல்களால் சிறந்த பெரியோர்களை இகழ்வது பாவம் மட்டுமன்று; கேட்டில் போய் முடியும். எனவே 'பெரியாரைப் பிழையாமை' என்ற ஓர் அதிகாரத்தையே பாடினார் பொய்யா மொழிப் புலவர். தீயால் சுடப்பட்டாலும் ஒருவாற்றால் உயிர் பிழைத்தல் கூடும்; பெரியோரிடம் குற்றம் செய்து நடப்பவர் எவ்வாற்றாலும் தப்பிப் பிழைக்க முடியாது என்ற கருத்தில்,

"எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்."

என்று பாடியதை எவர்தாம் மறக்க இயலும்? முன்னோர் கருத்துக் களை உள்வாங்கிப் பாடும் குருபரர். பெரியோரை இகழாதே என்ற தம் அறிவுரையை,

"பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினால் தாழ்வார்க்கு – அணியது

இளையாள் முயக்கெனினும் சேய்த்தன்றே மூத்தாள்
தொலையாத போகம் கொளல்.''

என்று நீதிநெறி விளக்கத்தில் பாடுகின்றார். நல்ல அறிவுரை இது. தம்மால் பணியத் தக்க பெரியோர் தம் தலைவாயிற் புறத்தே வந்து நின்றால், உடனே சென்று வரவேற்று உபசரிக்க வேண்டும்; செல்வச் செருக்கால், தம்மிடம் வரும் வரையில் காத்திருந்தால், திருமகள் நீங்குவாள்; திருமகளின் தமக்கையாகிய மூதேவியே அருகில் வந்தமர்வாள் என்று எச்சரிக்கின்ற குருபரர் உள்ளத்தைப் புரிந்து கொண்டால் வாழ்வில் தொல்லை இல்லை. பெரியோர்களை அவமதித்து மனத்தைப் புண்படுத்திய துரியோதனன் கதி நாம் அறிந்ததல்லவா!

செய்ய முடியாததைச் சொல்லாதே

பரப்பரப்பான இன்றைய சூழலில் பல்வேறு வகையான மனிதர்களைப் பார்க்கிறோம். தம்மைச் செல்வாக்கு மிக்கவராகவும் சகலகலா வல்லவராகவும் காட்டிக் கொண்டு, தம்மால் எதையும் செய்யமுடியும் என்றும் சாதிக்க முடியும் என்றும் சொல்லிப், பிறரை நம்பவைத்து இடர்ப்படுத்தித் தாமும் இடர்ப்படுகின்ற பலரைப் பார்க்கிறோம்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.''

என்ற குறள் நமக்கு நினைவுக்குவரும். இப்படிச் செய்ய முடியாததைச் செய்யமுடியும் என்று பிறர்க்கு உறுதிகூறி நம்பவைத்து ஏமாற்றாதே என்று குருபரரும் எச்சரிக்கையுடன் கூடிய அறிவுரையைக் கூறுகின்றார்.

''செயக்கடவ அல்லனவும் செய்துமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னாம் - செயிர்த்துரைப்பின்

நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சா(து) எடுத்துரைக்கற் பாற்று.''

என்பது அவர்தம் நீதிநெறி விளக்கப் பாடல். ஒருவன் தன்னிடம் வந்தபோது, அவனிடம் தான் அரிய செயல்கள் செய்யக்கூடும் என்று கூறி நம்பவைத்து, அவன் மற்றவரிடம் சென்று பயன் அடைவதையும் தடுப்பது நாகரிகமற்ற செயல் என்று கடுமையாகக்கூறி, அவ்வாறு செய்யாதே என்று அறிவுறுத்துகின்றார்.

பிறர்பழி கூறாதே

பிறர்பழி கூறாமல் வாழவேண்டும் என்பது சான்றோர் கருத்து. 'புறங்கூறாமை' என்ற ஓர் அதிகாரத்தையே எழுதினார் வள்ளுவர்.

''அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.''

என்பார் அவர். ஒருவன் அறநெறியைப் படிக்காதவனாய், அறம் அல்லாத செயலையே செய்து வந்தாலும், அவன் மற்றவனைப் பற்றி இகழ்ந்து பேசாமல் இருக்கின்றான் என்று பிறரால் சொல்லப்படுவது இனிது என்கின்றார்.

அறநெறி கூறி நன்னெறிப்படுத்தும் வள்ளுவர் வழிவந்த குருபரரும் பிறர்பழி பேசாதே என்று கூறுகிறார்; பேசினால் இத்தகைய நிலை ஏற்படும் என்று எச்சரிக்கை செய்து பாடுகின்றார்.

''பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான் பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக்
கொல்வான்போல்
கைவிதிர்த்(து) அஞ்சப் படும்.''

என்பது அவர்தம் வெண்பா. தனக்கு யாதொரு பகையும் இல்லாமல் இருக்க, பலருடைய குற்றங்களைப் பலமுறை சொல்லி, அதனால், மகிழ்ச்சி ஒன்றையே பெரும்பயனாகக் கொண்டு திரியும் மூடன், தான் கொள்ளும் பொருள் ஏதும் இல்லாமலே வழிப் போக்கர்தம் உடல் துடித்தலைக் காணும்பொருட்டு, கன்னத்தை அடித்து நொறுக்கி வருந்துகின்ற வேடன், பிறரால் நடுங்கி அஞ்சப்படுவதே போல், அச்சத்துடன் கைந்நடுங்கிப் பிறரால் அஞ்சப்படுவான் என்று கடுமையாக எச்சரிக்கின்றார் கவிஞர். 'பிறரால் அஞ்சப்படுவாய்; எனவே பிறர்பழி பேசாதே' என்று எச்சரிக்கையுடன் கூறும் அறிவுரை நன்றல்லவா!

பொய்த்தவ வேடம் போடாதே

எதையும் துறக்காமல் எல்லா ஆசைகளையும் நெஞ்சம் நிறைய வைத்துக் கொண்டு தவவேடம் போட்டுத் திரிந்து ஏமாற்றுபவர் பலர் எப்போதும் உளர். வள்ளுவப் பெருந்தகை,

> **''நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
> **வாழ்வாரின் வன்கணார் இல்.''**

என்று உரத்தகுரலில் பாடுகின்றார். உலகத்து ஆசைகளை நெஞ்சத்தில் இருந்து ஒழிக்காதவராய், முற்றும் துறந்தவர்போல் நடித்து, மக்களை ஏமாற்றி வாழ்கின்றவரைப் போன்ற கொடியவர் இவ்வுலகில் இலர் என்கின்றார். போலிகளைக் கொடியவர் என்று சாடுகின்றார் கவிஞர்.

'ஞானவெட்டியான்' என்றொரு நூல் சீரிய கருத்துக்களைக் கொண்டது; புரட்சிகரமான நூலுங்கூட அது! எல்லா ஆசை களையும் இதயத்துள் கொண்டு, தவவேடம் பூண்டு ஏமாற்றும் போலிகளை,

''சித்தமுடன் செபதபங்கள் செய்தோம் என்பார்;
செப்புகிறேன் அவர்களுடைச் செய்தி எல்லாம்;
கர்த்தனுட பாதமலர் நினைக்க மாட்டார்;
காடுசுற்றி ஓடியபின் கலங்கு வார்கள்;
நித்தமுடன் நிட்டையிலும் நிற்க மாட்டார்;
நிலத்தில்உள ஆசையெல்லாம் நினைத்துக்
கொள்வார்
சத்தமுடன் தேவாரம் கூகை போலும்
சதாநித்தம் ஓதிகுடி கெடுப்பார் ஆண்டே.''

என்று பாடி இனம் காட்டுவார்! 'நிலத்தில்உள ஆசையெல்லாம் நினைத்துக் கொள்வார்' என்பது நோக்கத் தக்கது.

உண்மைத் துறவியாகிய குருபரர், தம் காலத்துப் போலித் துறவிகளைப் பார்த்து, மனம் நொந்து, சில பாடல்கள் பாடியுள்ளார்.

''வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தேம் என்று மகிழன்மின்! - வஞ்சித்த
எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவ(து) அறிவு''

என்பது ஒன்று. 'பொய்த்தவ வேடத்தால் பிறருக்கு வஞ்சனை செய்து, அத்தவ வேடத்தால் தம் தீயொழுக்கத்தை மறைத்து, நடக்கின்ற அறிவிலிகளே! எல்லோரையும் ஏமாற்றிவிட்டோம் என்று மகிழ்ந்து விடாதீர்கள்! பிறர் அறியாத வண்ணம் நீங்கள் செய்த வஞ்சகச் செயல்களை, எங்கும் நிறைந்து நிற்பவனாகிய இறைவன் காண்பான் என்று பயந்து, உடல் நடுங்குதலே அறிவுடைமை' என்று கூறுவது எத்துணை எச்சரிக்கை நிறைந்த அறிவுரை. ஏமாற்றி வாழும் எத்தர்கள் நெஞ்சுகொளத் தக்க சீரிய அறிவுரை இது! 'வஞ்சித்தொழுகும் மதியிலிகாள்' என்ற தொடர், கவிஞரின் கோபத்தில் வெளிப்பட்ட தொடராகும்!

அரசே அருள்வேண்டும் உனக்கு

தனிமனிதர்களுக்கும் துறவிகளுக்கும் அறிவுரை கூறும் குருபரர், ஆள்கின்ற அரசுக்கும் சிறப்புமிக்க அறிவுரைகள் பல கூறுகின்றார். தமிழகத்தைத் தமிழரல்லாத பிறர் ஆண்டு கொண்டிருந்த காலம் குருபரர் காலம். சண்டையும் சச்சரவும் நிறைந்து துன்பம் மிகுந்த காலமது. தன்னலம் மட்டும் நெஞ்சில் கொண்டு, குடிமக்கள் நலத்தைச் சிறிதும் எண்ணாது, நல்லவர்கள் அறிவுரை கூறினாலும் கேளாது ஆண்ட நடைப்பிண அரசர்களைக் கண்டிருக்கிறார் கவிஞர். இதற்கு,

> **"முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி**
> **உடுப்ப உடுத்துண்ப உண்ணா - இடித்திடித்துக்**
> **கட்டுரை கூறின் செவிக்கொளா கண்விழியா**
> **நெட்டுயிர்ப்போ(டு) உற்ற பிணம்"**

என்ற அவர்தம் பாடல் சான்றாகும். எனவே காசுக்கு அறிவுரை கூறுவது அவர்தம் கடமையாகிறது! குடிமக்கள் துன்பப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில், அச்சமின்றி, மன்னனுக்கு,

> **"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்**
> **இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்**
> **காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்**
> **அதுநற் கறிந்தனை யாயின் நீயும்**
> **நோதும லாளர் பொதுமொழி கொளாது**
> **குடிபுறந் தருகுவை யாயின்**
> **அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே"**

என்று, வெள்ளைக்குடி நாகனார் என்ற சங்ககாலக் கவிஞர், அறிவுரை கூறிய நாடல்லவா இது! அவ்வழியில் குருபரரும் பாடுகின்றார் அறிவுரை கூறி! கண்ணால் தன் கருத்தைக் குறிப்பாலே அறிவித்து, நாட்டில் நடப்பனவற்றை நேரில் பார்ப்பதைப் போல, பிறர் மூலம் செவியால் செய்திகளைக்

கேட்டறியும் மன்னன் பிறப்பு முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனே! ஆயினும் குளிர்ந்த அருளோடு குடிமக்களைப் பாது காவாது போனால், அம் மன்னனுக்கு என்ன பயன் உண்டாகும்? பேடியர்க்கு, வெற்றியைத் தரத்தக்க வாளாயுதத்தால் என்ன பயன்? என்று கடுமையான வினாவோடு தம் அறிவுரையை அரசுக்கு வைத்து, 'அரசே உனக்கு அருள் வேண்டும்!' என்று அறிவுறுத்து கின்றார்.

> **''கண்ணிற் சொலிச்செவியின் நோக்கும் இறைமாட்சி**
> **புண்ணியத்தின் பாலதே ஆயினும் - தண்ணளியால்**
> **மன்பதை ஓம்பாதார்க்(கு) என்னாம்? வயப்படைமற்(று);**
> **என்பயக்கும் ஆண்அல் லவர்க்கு.''**

என்பது, நீதிபுகட்டும் அவர் கவிதை! குடிமக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், கொடிய சிந்தனையோடு, கொடுமைபல செய்து திரியும் அரசியல்வாதிகள் படித்துச் சிந்திக்க வேண்டிய பாடல் இது!

இன்புறுத்தும் கவியுள்ளம்

அறிவுரைகள் கூறுகின்ற அறச்சிந்தனையாளர் மட்டு மல்லர் குருபரர்; அற்புதமான கவிதைகள் புனையும் படைப் பிலக்கியவாதியுங் கூட. அறங்களை உணர்ந்து கொள்வதோடு மகிழ்வாகவும் இருக்கவேண்டும் என்று நினைப்பது படைப் பிலக்கியவாதியின் உள்ளம். அறத்துப்பால் பாடிய வள்ளுவர் இன்பத்துப்பால் பாடவில்லையா? பற்பல அறிவுரைகள் கூறிய பாரிதியார் "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா!" என மகிழ்ந்து, நம்மையும் மகிழச் சொல்லவில்லையா? எனவே அறிவுரைகளைப் புகன்ற கவிஞர் குருபரர், மானிட ஆன்மாவை இன்புறுத்தும் கவியுள்ளம் கொண்டவராகவும் திகழ்ந்தார். கவிதை இலக்கியத்தில் இன்புறுத்துவது எது? அற்புதமான கற்பனைகளே! சுகமான கற்பனைகளின் கருவூலங்களாக அவர்தம் கவிதைகள் ஒளிர்கின்றன.

மயங்கவைக்கும் ஒரு கற்பனை... வைகையின் அலைகளால் எறியப்பட்ட வலம்புரிச் சங்குகளில் ஒன்று, எறியப்பட்ட வேகத்தால், மதுரை மாநகரில் உள்ள மாளிகையின் மேற்றிசை வாயிலில் உள்ள உச்சி மாடத்தில் சென்று விழுகின்றதாம். பின்னர், கீழிறங்கி வருகின்றதாம். அதனைக் கண்ட அவ்வூர்க் கன்னிப் பெண்கள், வளைந்த வெண்ணிறத் தோற்றமுடைய காரணத்தால் அதனை மூன்றாம் பிறையென்று கருதி, தம் தாமரை போன்ற கைகளைக் குவித்து வணங்குகின்றார்களாம்!

> ''தூணுலாம் பசும்பொன் தோரண முகப்பில்
> சூளிகை நெற்றிநின் றிறங்கும்
> சுரிமுகக் குடக்கூன் வலம்புரிச் சங்கம்
> தோன்றலும் மூன்றுநாள் நிரம்பா
> நீணிலா வெனக்கொண் டணங்கனார் வளைக்கை
> நெட்டிதழ்க் கமலங்கள் முகிழ்க்கும்''

நிலவைக் கண்டு தாமரை குவியும் என்ற இயற்கை நியதிக் கேற்பப் பெண்களின் தாமரையாகிய கைகள் குவிந்தன – வணங்கின என்பது நளினமான கற்பனை!

இன்னொரு கற்பனை... மேகங்கள் வானத்தினின்றும் இறங்கி அலைகளை உடைய நீரைப் பருகின! அம் மேகங்களை கொல்லும் தன்மையுடைய மதயானைகளுடன் வேறுபாடு தெரியாமல், மின்னற் கொடிகளைக் கொண்டு சுற்றி, பாகர்கள் கட்டிப் பிடித்தனராம்! உடனே நடுக்குற்று அலறினவாம் மேகங்கள்! இது மதுரைக் கலம்பகக் கற்பனை!

> ''விண்ணின்(று) இறங்குபு விரிதிரை மேய்ந்த
> கொண்மூக் குழம்பு கொலைமதக் களிற்றொடும்
> வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்கு
> ஆற்றல்கொ டுற்றபா கலைத்தனர் பற்றத்
> திரியமற் றெம்மைத் தீச்சிறை படுக்கெனப்

பருதிவேல் உழவன் பணித்தனன் கொல்லென
மெய்விதிர்த் தலறுபு''

என்பன கற்பனைச் சுகம்தரும் மதுரைக் கலம்பகக் கவிதை வரிகள்! இயற்கைக்கு அப்பாற்பட்ட கற்பனையாயினும் ரசிக்கவைக்கும் ரம்மியமான கற்பனையாகும்!

மற்றொரு கற்பனை... மதுரை நகரின் வளத்தையும் அழகையும் வருணிக்கின்றார் கவிஞர். மாமர நிழலில் கண்துஞ்சும் எருமை தன் கன்றை நினைத்ததும் பால் சொரிகின்றது; சொரிந்த பாலால் நீர்நிலை திருப்பாற் கடல்போல் ஆகின்றது; அதில் தாமரை மலரில் உள்ள தாதில் ஆடிப் பொன்னிறம் பெற்ற அன்னம் பறவை நிறைந்திருக்கும் என்று கற்பனை செய்கின்றார்.

''தென்னன் தமிழின் உடன்பிறந்த
சிறுகால் அரும்பத் தீயரும்பும்
தேமா நிழற்கண் துஞ்சுமிளம்
செங்கண் கயவாய்ப் புனிற்றெருமை
இன்னம் பசும்புல் கறிக்கல்லா
இளங்கன் றுள்ளி மடித்தலநின்று
இழிபால் அருவி உவட்டெறிப்ப
எறியும் திரைத்தீம் புனற்பொய்கைப்
பொன்னங் கமலப் பசுந்தோட்டுப்
பொன்தா தாடிக் கற்றைநிலாப்
பொழியும் தரங்கம் பொறைஉயிர்த்த
பொன்போல் தொடுதோ லடிப்பொலன்சூட்டு
அன்னம் பொலியும் தமிழ்மதுரை....''

என்பது அவர்தம் பாடல். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் உள்ள தாலப்பருவக் கற்பனை இது. எருமை தன் கன்றை நினைத்துச் சொரிந்த பாலால் பொய்கை பாற்கடல் போல் தோன்றத்; தாமரைத் தாதிலே ஆடிப் பொன்னிறம் பெற்று, அம்மலரிலேயே இருந்த

அன்னம் திருமகளைப் போலத் தோன்றுகின்றது என்கிறார். கோசல நாட்டை வருணிக்கும் கம்பன் பாடலின் தாக்கம் இக் கற்பனை.

> ''சேலுண்ட ஒண்க ணாரின்
> திரிகின்ற செங்கால் அன்னம்
> மாலுண்ட நளினம் பள்ளி
> வளர்த்திய மழலைப் பிள்ளை
> காலுண்ட சேற்று மேதி
> கன்றுள்ளிக் கனைப்ப சோர்ந்த
> பாலுண்டு துயிலம் பச்சைத்
> தேரைதா லாட்டும் பண்ணை.''

என்பது கம்பன் கவிதை. கம்பன் கவிதையை உள்வாங்கிக் கொண்டு புதியதாக ஒரு கற்பனையைத் தோற்றுவித்து நம்மை மகிழ்விக்கின்றார் குருபரர்.

முன்னோர்களை மதித்தல்

தமிழ் உள்ளம் என்பது, மொழிக்கும் நாட்டுக்கும் ஆன்மிகத் துக்கும் பாடுபட்ட முன்னோர்களை மதித்துப் பாராட்டக் கூடியதாக இருக்கும். மதிப்பதும் பாராட்டுவதும் போற்றுவதும் நல்ல சமுதாயத்தின் பண்பாடாகும். அத்தகு பண்பாடு நம் தமிழகத்தில் காலம்காலமாகத் தொடர்ந்து வரக் கூடியதாகும்.

ஈடிணையற்ற பெரும்புலவராகிய கபிலர் கழா அத்தலையார் என்னும் புலவர் பெருமானை, "புகழ்ந்த செய்யுட் கழா அத்தலை" போற்றுகின்றார். கழா அத்தலையாரைப் போற்றிய கபிலர் பெருமானை, பொருந்தில் இளங்கீரனார் என்னும் புலவர்,

> ''செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
> வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்''

என்று பாராட்டுகின்றார்.

நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு, அதனால் தளர்ச்சி ஏற்பட்ட போதும், தவறாது, நாள்தோறும், திருமஞ்சனமாட்டிச் சிலவழிபாடு செய்து, கொண்ட உறுதி குலையாதிருந்தவர் புகழ்த்துணை நாயனார். பசிமயக்கத்தால் சிவ வழிபாட்டின் போது மயங்கி விழுந் தார். சிவபெருமான் அவரது தொண்டை மெச்சி, பஞ்சம் தீரும் வரை, தினம் ஒரு பொற்காசு வழங்கி அருள்செய்தார். அவர்தம் சிவத்தொண்டைப் போற்றிப் பாடி மதிக்கின்றார், சைவமும் தமிழும் இரு கண்கள் என்று கொண்டு தொண்டு புரிந்த சம்பந்தர்.

> **''அலந்த அடியான் அற்றைக் கன்றோர் காசெய்திப்**
> **புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே''**

என்பது செந்தமிழ்ச் சம்பந்தரின் பாடல்வரி. பொருள் இல்லாத போதும் தளராது தொண்டு புரிந்த நாயனாரின் உறுதிப் பாட்டைப் போற்றி மதிக்க வேண்டும் என்பது சம்பந்தரின் திருவுள்ளம்.

திருவாரூரில் சிவபெருமானை வழிபடச் சென்ற திருநாவுக் கரசர், அக்கோயிலில் நீரால் விளக்கேற்றிப் பங்குனி உத்திரப் பெருவிழாவை இனிது நடத்திய நமிநந்தியடிகளின் தொண்டைப் போற்றி,

> **''ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொன் ஆரகத் தடக்கிப்**
> **பாரூர் பரிப்பந்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்**
> **நாரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நமிநந்தி**
> **நீரால் திருவிளக் கிட்டமை நீண்டறியு மன்றே''**

என்று பாடுகிறார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை, அவர்தம் உள்ளத் தைப் படம் பிடித்துக் காட்டும் முன்னோர்களை உச்சிமேல் வைத் துப் போற்றுகின்றார். முன்னோர்களைப் போற்றும் திறத்துக்குத் திருநாவுக்கரசரைப் போற்றும்,

''திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்''

என்ற ஒரு தொடர் போதும்.

முன்னோர்களைப் போற்றிப் பாடிடும் இந்தத் தமிழ்ப் பண்பாடு குருபரர் உள்ளத்தில் வேரூன்றி இருந்தது. போற்றிப் பாடி மதித்து வாழ்வது அவசியம் என்று எண்ணியது குருபரர் தமிழ் உள்ளம். முன்னோர் மதிப்பது நம் கடமையும் கூட! மதிப்பதில் போற்றுவதில் நன்றியும் கலந்துள்ளது.

சீரிய பண்பாட்டில் தோன்றி வளர்ந்த குருபரரின் தமிழ் உள்ளம், சமண பௌத்த சமயங்களுக்கிடையே சிக்கித் தவித்த சைவத்தை மீட்டும், செந்தமிழ் வளர்த்தும் தொண்டு புரிந்த தமிழ் ஞான சம்பந்தரைக் "கழுமல மதலை" என்றும், "கவுணியர் பெருந் தகை" என்றும், "புகலியர் குரிசில்" என்றும் போற்றிப் பாராட்டு கின்றது; சம்பந்தரைப் போலவே சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்த தாண்டக வேந்தரின் உயர்ந்த பாடல்வரிகளில் சிலவற்றைப் பொன்னே போலப் போற்றித் தன் கவிதைகளின் இடையே ஒளிரவைத்து, மதித்து, தன் மரியாதையைக் காட்டு கின்றது; தமிழுலகம் மறவாத வண்ணம் 'திருத்தொண்டத்தொகை' பாடித் தொண்டு புரிந்த தம்பிரான் தோழரை "நாவலர் பெருமான்" எனவும் "ஒருபெரும் புலவன்" எனவும் "பாவலன்" எனவும் பாடிப் பரவுகின்றது; வினையறுத்து வீடு பேறளிக்கும் உயர்ந்த திருவாசகம் பாடிய, பொய்யடிமை இல்லாத புலவராகிய மணிவாசகரைப் "பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்" எனவும், "சொற்றமிழ் விரகன்" எனவும் போற்றிப் பாடி மதிக்கின்றது; சண்டீசர், கண்ணப்ப நாயனார் போன்றவர்களைப் பாராட்டிச் சிறப்பிக்கின்றது. தமக்குமுன் வாழ்ந்து, சாதனை புரிந்து சான்றோர்களைப் போற்றி மதித்திட வேண்டும் என்பதைச் செயல் அளவில் காட்டிச் சிறப்படைகிறார் முனிவர் கோமானாகிய குருபரர்.

பொழுது போக்கு

கவிஞர் குருபரர் வாழ்ந்த பதினேழாம் நூற்றாண்டில் நாடெங்கும் சமயப் பிரச்சாரங்கள் நடந்தன; சமயப் பூசல்கள் எழுந்தன. நாயக்கர்கால வரலாறு, இவற்றையெல்லாம் உணர்த்து கின்றது. குருபரரே, ஞானோபதேசம் செய்து தம்மையாட் கொண்ட குருநாதரைப் போற்றிப் புகழ்ந்து பாடுகின்ற பண்டார மும்மணிக் கோவையில், அவரை, சமயப் பிணக்கறுத்த சித்தராகக் கண்டு,

> **''பின்னம் படைத்த சமய விரோதப் பிணக்கறுத்தோர்**
> **சின்னம் படைத்த மணிமாசி லாமணிச் சித்தர்''**

என்று பாடுவதால், அக்காலத்தில் சமயப் பூசல்கள் இருந்தன என்பதை நாம் உய்த்துணரலாம். ஆனால் சிவபரம்பொருளை வழிபடும் சைவசமயத்தைச் சார்ந்திருந்தும், குருபரர், பிற சமயக் காழ்ப்பின்றி, சமயப் பொதுநோக்கு உடையவராகவே இருந்தார்.

ஒரு பரம்பொருளே பலபெயர்களால் அழைக்கப் படுகிறது என்ற உண்மைகளையும், எம்முறையில் வழிபட்டாலும் அவ் வழிபாடு, அப் பரம்பொருளைச் சேரும் என்ற உண்மையையும் உணர்ந்தவராய்க் குருபரர் இருந்தார்.

> **''கல்லிடைப் பிறந்து போந்து**
> **கடலிடைக் கலந்த நீத்தம்**
> **எல்லையில் மறைக ளாலும்**
> **இயம்பரும் பொருளீ தென்னத்**
> **தொல்லையில் ஒன்றே ஆகித்**
> **துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்**
> **பல்பெரும் சமயம் சொல்லும்**
> **பொருளும்போல் பரந்த தன்றே''**

என்ற கம்பன் கவிதையையும்,

''ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே''

என்ற திருமூலர் பாடலையும் தம் நெஞ்சுக்குள் வைத்திருந்தார்.

''யாதொரு தெய்வம் கண்டீர்
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம்
வருவர்''

என்ற தத்துவச் செய்யுள் மனசுக்குள் ஒளிவீசிக் கொண்டிருந்தது. அதனால் அவர்தம் தமிழ் உள்ளத்தில் பொது நோக்கு நிலவியது. நெடுங்காலமாய் நல்லவர்கள் பெரியவர்கள் பின்பற்றி வந்த பொதுநோக்கு அவரிடம் உறுதியாக விளங்கியது. இப்பொது நோக்கின் காரணமாகவே 'திருவாரூர் நான்மணிமாலை' என்னும் செந்தமிழ் பனுவலில்,

''இதுவே பொருளென்று எவர்எவர் கூறினும் ஏற்பதுஎது
அதுவே பொருள்என்று அறிந்துகொண்டு ஏனைப்
பொருள்எவர்க்கும்
பொதுவேஎன் றாலும் பொருந்தும்எல் லோர்க்கும்
பொதுவில்நிற்கும்
மதுவே மலர்ப்பொழில் ஆரூரினும் வைகும் வைகலுமே''

என்றுபாடினார், "இதுவே பரம்பொருள் என்றுபல்வேறு சமயத்தார் ஏற்றுக் கொள்ளும் பொருள் எது? அதுவே பரம்பொருள் என்று நான் அறிர்துகொண்டேன். அப்பொருள் எல்லார்க்கும் பொதுவே யாகும் (பொதுப்பொருளே ஆகும்) எனினும் பொருந்தும் எல்லார்க்கும் சபையில் நிற்கும் (பொதுவான இடத்தில் நிற்கும்) கள் நிறைந்த பூக்களை உடைய சோலை சூழ்ந்த ஆரூரிலும்

(யாருடைய ஊரிலும்) தங்கவும் தங்கும்'' என்று தெள்ளத் தெளிவாகக் கூறி நம்மனோரைச் சிந்திக்க வைக்கின்றார். தாம் உணர்ந்து பின்பற்றும் பொதுநோக்கை மானிடர் எல்லோரும் உணர்ந்து பின்பற்ற வேண்டும் என்பதால் கற்பனை நலத்தோடும் சொல் அலங்காரத்தோடும் கவிஞர் பாடுகின்றார்.

சமயப் பொது நோக்கு இல்லாமல் – பரந்த உள்ளம் இல்லாமல் – பூசல்களில் ஈடுபட்டால் பரம்பொருளைக் காண இயலாது. முழுமாயக் கடலில் மூழ்கித் தத்தளிக்க நேரிடும் என்பதைக் கற்பனை அழகோடு, எல்லோரும் உணரும் வண்ணம் முத்துக்குமரசாமி பிள்ளைத் தமிழில் பாடுகின்றார் குருபரர்.

''பைந்தண் கமல வட்டவணைப்
பாவை அனையார் பூவிரியும்
பசுமென் குழற்கூட் டகிற்புகையின்
படலம் மூட முடைநறவின்
கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்
கடைசி மகளிர் செந்நெலைப்பைங்
கன்னல் எனவும் சன்னலைப்பூங்
கமுகம் எனவும் கடைக்கூடாத்
தந்தம் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறும்
சமயத் தவர்போல் தலைமயங்கும்
அந்தண் பழனக் கந்தபுரி''

என்பது பாடல். திருமகள் போன்ற அழகான செல்வ வளம் மிக்க பெண்கள் கூந்தலுக்குக் காட்டும் அகிற்புகையின் கூட்டம் மூட – கள்ளருந்திய மருதநிலப் பெண்கள் – கள்ளருந்திய மயக்கத்தாலும் அகிற்புகைப் படலம் மூடலானும் – செந்நெல்லைக் கரும்பு எனவும் கரும்பைக் கமுகம் எனவும் முடிவு தெரியாமல் – தம்தம் மனத்தில் தோன்றிய வண்ணம் சொல்லிச் சொல்லி– முழுமாயக் கடலில்

மூழ்கித் தடுமாறும் சமயவாதிகள் போல் தடுமாறுவர் என்ற கற்பனை வாயிலாக, தத்தம் கருத்துக்கமைந்த வண்ணம் பிடிவாதமாய்ப் பேசும் சமயங்களெல்லாம் முடிவில் பயன்காணாமல் போய்விடும் என்று புலப்படுத்துவது அற்புதமானது. இவ்வாறு சிந்திக்க – பாடக் காரணம் என்ன?

''சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்''

என்ற மணிவாசகத் தமிழிலும்,

''அரனதிகன் உலகளந்த
அரிஅதிகன் என்றுரைக்கும்
அறிவி லார்க்குப்
பரகதிசென் றடைவரிய
பரிசேபோல்''

என்ற கம்பன் தமிழிலும் குருபரர் உள்ளம் தோய்ந்தமைதான்! அறவுரை கூறுவது போல் கூறாமல், அழகான கற்பனை ஒளிர, தம் இனிய கருத்தை நமக்குக் கூறி நெறிப்படுத்துகின்றார் கவிஞர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை நாம் உணர வேண்டும் என்பதே குருபரரின் தமிழ் உள்ளம்!

தேசியக் கண்ணோட்டம்

பரந்த உள்ளம் கொண்ட குருபரர், தேசியக் கண்ணோட்டத்தின் முன்னோடியாகவும் திகழ்கின்றார். தேசிய ஒருமைப்பாடு என்னும் சிந்தனை இருபதாம் நூற்றாண்டில்தான் உருவானது. ஒரு காலத்தில், அங்கம், வங்கம், கலிங்கம் என்று அய்ம்பத்தாறு தேசங்களாக இருந்துதான் நம்நாடு. வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிடியில் இருந்து மீளத் தோன்றிய விடுதலைப் போராட்ட காலத்தில்தான், 'இந்தியர்' என்ற ஒரு தேசமாக ஒளிர ஆரம்பித்தது. பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள் கொண்ட நம்நாடு

பல்வேறு பூக்கள் கொண்ட ஒரே மாலையாகப் பேசப்பட்டது. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்று முழங்கப் பட்டது.

''சிந்து நதியின் மிசைநில வினிலே
சேரநன் னாட்டிளம் பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டி சைத்துத்
தோணிகள் ஓட்டிவிளை யாடி வருவோம்

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிச ளிப்போம்''

என்றெல்லாம் பாடி, பாரதி, தேசியக் கண்ணோட்டத்தைப் பிரதி பலித்தான். ஆனால் 17 ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் பிறந்த கவிஞர் கோமனாகிய குமரகுருபரர், இவ்வுணர்வின் முன்னோடியாக வாழ்ந்திருக்கிறார்.

இமயம்முதல் குமரிவரை எனச் சொல்வதுண்டு; குமரி முதல் கங்கைவரை எனக் கூறுவதுண்டு. இதில் ஓர் உண்மை உள்ளது. ஆன்மிக உள்ளம் குமரிமுதல் இமயம் வரை உள்ள பூமியை ஒன்றாகவே எண்ணியது. வடபுலத்துக் காசியில் உள்ளவர்க்குத் தென்திசைக் குமரியும் இராமேஸ்வரமும் புனிதம்மிகு தலங்களாகும். தென்புலத்துத் தமிழனுக்கு வடதிசைக் காசி புனிதம்மிகு தலமாகும். கயிலை யாத்திரை வாழ்வின் இலட்சியமாகும். இப்படியோர் தேசியக் கண்ணோட்டம் நெடுங்காலமாகவே உள்ளது. வெறும் வார்த்தையாக மட்டும் இல்லாமல் – இமயம்முதல் குமரிவரை என்பதைச் செயல் அளவிலேயே – உணர்வு மயமாகக் கொண்டு, 17ஆம் நூற்றாண்டு ஞானவேந்தர் குருபரர் வாழ்ந்தார். தமிழ் உள்ளம் எப்போதும் இப்படித்தான் இருக்கும் என்று நினைக்க வைக்கக் கூடியதாக வுள்ளது அவர்தம் சீரிய வாழ்வு.

தமிழகத்தின் தென்கோடியில் உள்ள தாமிரபரணிக் கரையிலே பிறந்து, இனிமைமிகு தெய்வீகக் கவிதைகளைப் பாடிய வண்ணம் யாத்திரை மேற்கொண்டு, தமிழ் மணக்கும் வைகைக் கரையிலே பொன்னும் பொருளும் கவிதைகளுக்குப் பரிசுகளாகப் பெற்று, பக்திவெள்ளம் கரைபுரண்டோடும் காவிரிக் கரையை நண்ணி, ஞான உபதேசம் பெற்று, கங்கைக் கரைக்குச் சென்று, தங்கி, தமிழகத்தில் பெற்ற பொன்னையும் பொருளையும் கொண்டு, ஒரு திருமடத்தை நிறுவி, அறப்பணிகளில் ஈடுபட்ட குருபரர் தேசியக் கண்ணோட்டத்தின் முன்னோடியாவார். இன்னும் அவர் நிறுவிய திருமடம் அக் கண்ணோட்டத்திலேயே திகழ்கிறது என்பது போற்றுவதற்குரியது.

பாரதத்தின் தென்கோடியில் உள்ள திருச்செந்தூரில் எழுந்திருளியுள்ள குமரக் கடவுளைப் பாடியதோடு, வடகோடியில் உள்ள காசியில் எழுந்தருளியுள்ள சிவபரம் பொருளையும், குருபரர் செந்தமிழ்க் கவிதைகளால் பாடியது நோக்கத் தக்கது. இவ்வுணர்வை அவர் தேவார ஆசிரியர்களிடம் இருந்து பெற்றிருக்கக் கூடும். இங்கே கவிமழை பொழிந்த தேவாரக் கவிஞர்கள் கேதாரநாதரையும் கயிலாய நாதரையும் பாடினார்கள் அல்லவா!

தாய்மொழிப் பற்று

பரந்த உள்ளம் உள்ளவராக இருந்தும், தேசியக் கண்ணோட்டம் உள்ளவராக இருந்தும், முற்றும் துறந்த துறவியாக இருந்தும், தாய்மொழிப் பற்று மிக்கவராகக் குருபரர் இருந்தார். உள்ளத்தில் தாய்மொழிப் பற்று மேலோங்கி இருந்தது. தமிழகத்தில் தேசியம் பேசித் தாய்மொழிப் பற்று இல்லாமல் இருப்பவர்கள் குருபரரைச் சிந்திக்க வேண்டும். "தமிழில் இவருக்கு இருந்த அன்பு அளவிடற்கரியது" என்பார் டாக்டர் உ.வே சாமிநாதையர்.

தாய்மொழிப் பற்று என்பது தேசியக் கண்ணோட்டத்திற்கு தேசிய உணர்வுக்குத் தடையில்லை. தேசிய உணர்வில் திளைத்த கவிஞர் தாகூர், கல்கத்தாப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், ஆங்கில மொழியிலேயே ஆற்றப்பட்டு வந்த பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு மரபை மாற்றி, தம் தாய் மொழியிலேயே சொற்பொழிவாற்றவில்லையா! சிதறிடாத சோவியத் யூனியனின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான கம்ஸதோவ், சோவியத் யூனியனின் குடிமகனாய், சர்வ தேசியம் பேசியவர். அவர்,

''எனது
அவார்மொழி
நாளை அழியுமெனில்
நான்
இன்றே இறப்பேன்''

என்று பாடித் தம் தாய்மொழிப் பற்றை வெளிப்படுத்தவில்லையா! எனவே பேதம் பார்க்காது - தேசிய உணர்வை ஆன்மிகத்தால் உள்வாங்கி இருந்த குருபரர் தமிழ்ப்பற்று நிறைந்தவராக விளங்கினார்; உள்ளம் தமிழ் உள்ளமாகவே இருந்தது.

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பிய செந்தமிழ்ச் செம்மல், புகலியர்கோன், திருஞானசம்பந்தருக்குப் பிறகு தமிழை மிகமிக அதிகமாக நேசித்துப் புகழ்ந்தும், பெருமைகளை அடுக்கிப் பலபடப் போற்றியும் பாடியவர் குருபரரே. அவ்வாறு பாடியதற்கு அவர் வாழ்ந்த காலச்சூழலும் ஒரு காரணமாகும்.

குருபரர் வாழ்ந்த காலம், தமிழரல்லாத நாயக்கர்கள் தமிழகத்தை ஆண்ட காலமாகும். நாயக்க மன்னர்கள் ஆண்ட காலம் எப்படி இருந்தது? "ஆளுகின்ற அராசர்களுக்குக் கூட அஞ்ச வேண்டுவதில்லை. ஆனால் அணுக்கத் தொண்டர்களுக்கு அஞ்சியே வாழ வேண்டும் என்ற நிலை இருந்தது. தஞ்சையிலும்

திருச்சியிலும் மதுரையிலும் கோநகர் அமைத்து நாயக்க மன்னர்கள் கொலுவீற்றிருந்தனர். அவர்கள் தெலுங்கையே தாய்மொழியாகக் கொண்ட ஆந்திரர்களாவார்கள். அவர்களைச் சூழ்ந்து ஆட்சிக்கு உதவிய அமைச்சர்களும் அறிஞர்களும் வடமொழி ஆர்வலர்களே ஆவர். தமிழர்கள் வாழும் தமிழ்நிலம் அவர்கள் ஆட்சியிலே இருந்தது. ஆதலின் வடமொழிக்கு வாழ்த்துக் கூறுபவர்களே வையகத்தில் வாழ இயலும்; வளம் வாய்ந்த தமிழ்க் கலையினை நுகரமுடியும். இதுவே இக்காலச் சூழநிலை. வடமொழிக்கு வாகை பாடினாலன்றி வண்டமிழ்ப் புலவர்கள் வாழ இயலாத நிலை இருந்தது" என்று ஆய்வாளர் கோ.வே.பெருமாள் விவரிப்பர்.

இச்சூழலில், தமிழ் படித்தவரே, தமிழருமை அறியாது, தமிழைக் கேலி செய்தனர். வடமொழிமேல் அளவுக்கதிகமாகப் பற்றுக் கொண்டு, தமிழைவிட வடமொழியே உயர்ந்ததாம் என்று பேசினர். ற, ன, ழ, எ, ஒ என்ற அய்ந்தெழுத்துக்களே தமிழ் மொழிக்கு உரிமை உடையன என்றும், இவ்வைந்து எழுத்துக்களை மட்டும் உடையது ஒருமொழி என்று கூறிட வெட்கப்பட வேண்டும் என்றும் இலக்கணக் கொத்து என்ற நூலில் சுவாமிநாததேசிகர் துணிந்து கூறினார்.

> ''அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை அவற்றுள்
> ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?
> அன்றியும் அய்ந்தெழுத் தால்ஒரு பாடையென்று
> அறையவே நாணுவர் அறிவுடை யோரே!''

என்பன சுவாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்துப்பாயிரத் தொடர்கள். தாய்மொழிப்பற்று உள்ள எந்தப் புலவனையும் கோபத்திற்கு ஆளாக்கக் கூடியவை இந்தத் தொடர்கள்! கோபப் படாமல் இருந்தால், அவன், தமிழ்ப் புலவனே அல்லன்! கோபத்தின் விளைவால்தான் பரஞ்சோதிமுனிவர்,

''யாரறிவார் தமிழருமை என்கின் றேன்என்
அறிவீன மன்றோஉன் மதுரை மூதூர்
நீரறியும் நெருப்பறியும் அறிவுண் டாக்கி
நீயறிவித் தாலறியும் நிலமும் தானே!''

என்று பாடினார். இவ்வாறு பாடியதோடமையாமல், பிறமொழி களோடு தமிழை ஒப்பிட்டு, திருவிளையாடற் புராணத்தில்,

''கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்த இப் பசுந்தமிழ்ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ''

''தொண்டர் நாதனைத் துதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண்ணுருவாகக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்''

என்று பாடி, பிறமொழிகளைவிட மேன்மை மிக்கது தமிழே என்ற கருத்தை உறுதியுடன் வெளியிட்டார். சுவாமிநாத தேசிகரை விட நாகரிகம் மிக்கவர் பரஞ்சோதி முனிவர். எனவே பெயர் சுட்டாமல், வடமொழியை, சில இலக்கண வரம்பிலா மொழி என்று குறிப்பாகச் சுட்டினார். "கன்னித் தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்" என்ற தொடர் பரஞ்சோதிமுனிவரின் நெஞ்சக் கொதிப்பை உணர்த்துவதாகும். குறிப்பாகச் சொன்னால், இத்தொடர், இலக்கணக் கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகருக்குக் கூறிய பதிலே எனலாம். முற்றும் துறந்த முனிவராகிய பரஞ்சோதி முனிவரின் மனத்தையே கொதிப்படையச் செய்த காலச்சூழல் இது.

இந்தக் காலச் சூழல்தான், செந்தமிழ்க் கவிவேந்தர் குமரகுருபரரையும்; தமிழின் மேன்மை பற்றியும், சுவை பற்றியும்

தாய்மொழிப்பற்றோடு பாட வைத்தது. அருந்தமிழ், செழுந்தமிழ், செழுந்தமிழ்ச் செல்வம், செழுந்தமிழ்த் தெள்ளமுது, சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ், தண்டமிழ், தருசுவை அமுதெழ மதுரம தொழுகு பசுந்தமிழ், புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ், சங்கத் தமிழ், இசைமுத்தமிழ், பண்ணுலாம் வடிதமிழ், பைந்தமிழ், வண்டமிழ் என்றெல்லாம் தமிழை அடைமொழிகளோடு சிறப்பித்துப் பாடியவர்,

> ''மழலை வண்டுதட மலர்கு டைந்துபுது
> மதுவ ருந்திநறு மல்லிகைச் சேக்கையின்
> வடிப சுந்தமிழின் இசைப யின்றபெடை
> யொடுது யின்று''

என்று பாடி, வண்டுகூட, தாமரையில் இருந்து பசுந்தமிழ்ப் பாட்டைப் பாடுகின்றது என்று இசைப்பர். "என்றுமுள தமிழ்" "நீண்டதமிழ்" என்றெல்லாம் பாடி "வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே" என்று பாடிய கம்பனின் எதிரொலியே இது.

இப்படிப் பாடியதோடமையால், தாய்மொழி தமிழைத் "தெய்வத்தமிழ்" என்று பாடி, தெய்வத் தன்மை மிக்கது என்றும் மகிழ்கின்றார் குருபரர். ஆலவாய் அழகனைப் "பன்முகத் தமிழ்க் கொர் பயன்" என்று பாடி – ஆலவாய் அரசிஅங்கயற் கண்ணியை "முதுதமிழ் உததியில் வருமொரு திருமகள்'' "நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகும் நறுஞ்சுவை" என்றெல்லாம் இசைத்து – முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் கந்தக் கடவுளைத் "தெளிதமிழின் வடித்திடு நவரசமே'' என்று புனைந்து தமிழின் தெய்வத் தன்மையைப் புலப்படுத்துகின்றார்.

தெய்வத்தன்மை மிக்கது தமிழென்று உள்ளம் மகிழும் குருபரர், ஒருபடி மேலே சென்று, மேலும் தமிழைச் சிறப்பித்துப் பாடுகின்றார். சிவபெருமான் தோளழகை,

"தருசுவை அமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன"

என்று பாடி, பசுந்தமிழ்ப் பாமாலைகள் அணிந்தமையால் இறைவன் தோள் அழகு பெற்றதென்றும், தமிழும் பெருமை பெற்றதென்றும் புனைவார்.

மதுரை நகரைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாடாண்ட மரகதவல்லியாம் அங்கயற் கண்ணியை,

"தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி"

என்றிசைத்து, தமிழொடு பிறந்தமையால் பெருமை மிக்கவள் என்று, மனத்துள் எண்ணி, கற்பனை செய்து களிப்படைவார் குருபரர். மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி மேவிய முருகக் கடவுளின் செங்கனிவாய் மணக்கின்றது என்று பாடவந்த குருபரர்,

"கலைப்பால் நிறைந்த முதுக்குறைவில்
கல்விச் செல்வர் கேள்விநலம்
கனியக் கனிய அமுதூறும்
கடவுள் மறையும் முதற்சங்கத்
தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்
தண்தேன் நறையும் வடித்தெடுத்த
சாரம் கனிந்தூற் றிருந்தபசுந்
தமிழும் நாற"

என்று பாடி, தமிழால்தான் மணக்கின்றது என்று மகிழ்ச்சி அடைகின்றார்.

தமிழின் தெய்வத்தன்மையை, மேன்மையை, சுவையைச் சிறப்பித்துப் பாடும் குருபரர், சிவபெருமான் சுந்தர பாண்டிய

னாகவும், உமாதேவி தடாதகைப் பிராட்டியாகவும், குமரக்கடவுள் உக்கிரபாண்டியனாகவும் மதுரை நகரில் அவதரித்ததற்குக் காரணமே தமிழ் மொழியிடத்துள்ள ஆசையே என்று மதுரைக் கலம் பகத்தில் பாடி, தெய்வங்களே சுவைமிக்க தமிழுக்காக வானுலகில் இருந்து இறங்கி வந்தன என்று கற்பனை செய்து இனிது பாடிச் சிலிர்த்து நிற்கின்றார். தமிழ் அருமை அறியாதாரை யும் சிந்திக்க வைக்கிறார்.

"தமரநீர்ப் புவனம் முழுதொருங் கீன்றாள்
நடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுதல் ஒருநீ
சவுந்தற மாறன்ஆ னதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்?"

என்பன மதுரைக் கலம்பக் கவிதை வரிகள். "கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார்" என்று குருபரர் பாடுவதில், பரஞ்சோதி முனிவரின் உணர்ச்சி வேகத்தைக் காணலாம்.

சிவனார் குடும்பமே தமிழுக்காக, விண்ணில் இருந்து, மதுரைநகருக்கு வந்தது என்று பாடிய புலவர்கோமான், பைந்தமிழ்ச் சொல்லுக் கடங்கி, அதன் பின்னாலேயே, வேதங்கள் முறையிட, திருமால் சென்றதைப்

"பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டாலே"

என்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் உணர்ச்சி மேலிடப் பாடுவார்.

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

என்று பாடிய திருமழிசையாழ்வாரின் தேமதுரத் தமிழுக்காகப் பரந்தாமன் பின்சென்றதைத்தான் கவிஞர் அவ்வாறு பாடி யருளினார். தமிழுக்குப் பின் திருமால் செல்ல, தாம் புகழ்ந்தேத்தும் தெய்வம் தமிழுக்குப் பின் செல்கின்றதே என்று ஆதங்கப்பட்டு வாடிய பழைய வடமொழி வேதங்கள், திருமாலின் பின்னாலே முறையிட்டுக் கொண்டே செல்கின்றன என்று பாடுவதின் மூலம், தம் தாய்மொழியின் மேன்மையைக் குறிப்பில் உணர்த்துகின்றார், கவிஞர் குருபரர்.

தனித்தமிழ் இயக்க முன்னோடி

மணிப்பிரவாளநடை என்ற ஒன்று பல்லாண்டுகளின் முன், தமிழில் தோன்றியது. அது வடமொழிச் சொற்களையும் தமிழ்ச் சொற்களையும் கலந்து எழுதுவது ஆகும். தமிழ்ச் சொற்களைத் தேடக்கூடிய அளவுக்கு வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த பத்திரிகை களையும் நூல்களையும் பார்த்தால் வடமொழிக்கலப்பு எந்த அளவு இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம். தலையைச் சுற்றும்; படிப்பது தமிழ்தானா என்ற ஐயம் வரும்.

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பார்த்தால், 15ஆம் நூற்றாண்டில்தான் வடமொழிச்சொற்கள், தமிழில் மிகுதியாகக் கலந்தன என்பதை உணர்ந்து கொள்ளலாம். குறிப்பாகச் சொன்னால், பாரதம் பாடிய வில்லிப்புத்தூராரும் திருப்புகழ் இசைத்த அருணகிரிநாதரும் வடமொழிச் சொற்களை அதிகமாகக் கலந்து பாடியவர்கள் என்பர். தமிழை "அரியதமிழ்" "இனியதமிழ்" என்றும், கந்தக் கடவுள் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுக்குப் பிரவண விளக்கம் கூறியதை,

"கொன்றைச் சடையார்க் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே!"

என்றும் பாடித் தமிழின் சிறப்பைப் புலப்படுத்திய அருணகிரியார் இசைத்த கந்தரலங்காரப் பாடல் ஒன்றைப் பாருங்கள்!

"மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்துணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே."

எத்தனை வடமொழிச்சொற்கள்! கடைசி இரண்டடிகள் முழுமையும் வடமொழியால் அமைந்த சுலோகம் போலவே உள்ளதையும் பார்க்கலாம்.

இப்படிக் கலக்கத் தொடங்கிய வடமொழிச் சொற்கள், பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் ஆகியவற்றில் மிகமிக அதிகமாயிற்று. தமிழைக் காக்க எண்ணிய மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் கண்டார். பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதினார்; எழுதப் பணித்தார்; நாடெங்கும் புதுவெள்ளம் பாய்ந்தது.

கூர்ந்து பார்த்தால், இவ்வியக்கத்திற்குக் குமரகுருபரரே முன்னோடியாகக் காணப்படுகிறார்.

"அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன்
அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ"

என்று சககலாவல்லி மாலையில் பாடி, கலைமகளை தமிழ்த் தெய்வமாகக் கண்ட கவிஞர் குருபரர், முத்துக் குமரசாமி பிள்ளைத் தமிழில் கலைமகளைப் பற்றி ஓர் இனிய கற்பனை செய்கிறார்.

காப்புப் பருவம் பாடும்போது,

> "துறைப்பட்ட மறையவன் செந்நாப் படிந்துதன்
> சுவைநிறம் சிதைவுறாமே
> தொன்மறை கனிந்தூறும் அண்பல் நீரூறலில்
> தூக்கில் நனைப்புறாமே
> நறைபட்ட வெண்டோட்டு நளினம் பொகுட்டெமது
> நன்னெஞ் செனக்குடிபுகும்"

என்று பாடுகின்றார். 'குமரகுருபரர் கற்பனை' என்று ஆய்வு செய்த பேராசிரியர் ஆ. கந்தசாமி, இப்பாடல் அடிகளில் அமைந்துள்ள கற்பனையை விளக்கும் போது, "பிரமன் நாவில் இருக்கும் கலைமகள் அவன் வடமொழி பயின்ற செந்நாவின் நிறம்பட்டுத் தன் வெண்மை நிறம் மாறுபடாமலும், அவன் அண்பல்லில் இருந்து சுரக்கும் வடமொழியாகிய வெண்டாமரையில் குடிபுகுந்தாள் எனக் குமரகுருபரர் கற்பனை செய்கிறார்" என்று எழுதுகின்றார். எழுதி, மேலும், "குமரகுருபரரின் மொழி பற்றிய கருத்து தெளிவாகப் புலப்படுதலைக் காணலாம். இவர் வாழ்ந்த காலத்தில் வடமொழி செல்வாக்குப் பெற்றுத் தமிழுடன் கலந்தமையும், புலவர்கள் தனியே நின்று அக்கலப்பிலிருந்து தமிழைக் காத்தமையும் இதனால் விளங்கும்" என்பார். எனவே இக்கருத்தின் அடிப் படையில் பார்க்கும்போது, குருபரரே, தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடி ஆவார். வடமொழி ஆர்வலராய், தமிழைக் கேலி செய்த சுவாமிநாத தேசிகர் போன்றோர்க்குத் தமிழின் மேன்மையைப் புலப்படுத்தி, அளவுக்கதிகமாகக் கலக்கும் வடமொழி ஆதிக்கத்தில் இருந்து தமிழைக் காத்து, ஒரு பெரும் செயல் வீரராகப் பணிபுரிந்துள்ளார் குருபரர்.

அளவுக்கதிகமாகக் கலந்து ஆதிக்கம் செலுத்தும் வடமொழியில் இருந்து தமிழைக்காக்க விரும்பிய குருபரர், வடமொழிச் சொற்களைத் தமிழாக்கி வழிகாட்டுவதும் நோக்கத் தக்கது. எடுத்துக்காட்டாக ஆய்வாளர் பா.வேல்முருகன்,

நரசிங்கம்	>	நரகரி
இரணியன்	>	ஆடகப் பெயரின் அவுணன்
பானுகோபன்	>	இரவிபகை
கிரவுஞ்சமலை	>	குருகுபெயர்க் குன்றம்
மீனாட்சி	>	அங்கயற் கண்ணி
விசாலாட்சி	>	பெருந்தடக் கண்ணி
கிரியாசக்தி	>	இயற்றல்
ஞானசக்தி	>	அறிவு
சரம்	>	நிலையில் பொருள்
அசரம்	>	நிலையியல் பொருள்

என்றடுக்கிக் காட்டுவதை நோக்குக. வெறும் வார்த்தை அளவில் நிற்காமல், தாமே வடமொழிச் சொற்களைத் தமிழாக்கிக் காட்டி, எங்ஙனம் வடமொழி ஆதிக்கத்தில் இருந்து தமிழைக் காத்திட வேண்டும் என்று வழிகாட்டுவது போற்றத்தக்கது.

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.''

என்பார் வள்ளுவர். சொல்லுவது மட்டுமல்லாமல், சொல்லிய வண்ணம் செயல்படும் செயல்வீரராகவும் குருபரர் விளங்கு கின்றார்.

போர்க்குணமும் தமிழன்பும் மிக்க தென்பாண்டியன் சீமையில் பிறந்த கவிஞர் குமரகுருபரர், இவ்வாறு பணி யாற்றியதில் வியப்பில்லை; பணியாற்றாமல் இருந்தால்தான் வியப்பு! குமரகுருபரர், தாய்மொழிப் பற்று என்பதன் அடையாளம்! உள்ளம் தமிழ் உள்ளம்! குமரகுருபரரை நாம் உணர்ந்து கொண்டோம் என்பதற்கு அடையாளம், தாய்மொழிப் பற்றை அதிகமாக்கிக் கொள்வதுதான்!

பிறமொழி வெறுப்பின்மை

தமிழைச் சில வடமொழிப் பற்றார்வலர் இகழ்ந்து பேசிய காலச் சூழலில், பற்றற்ற துறவியாக இருந்தும், தாய்மொழியாம் தமிழைத் துறக்காமல் பேரன்பு கொண்டு, அதன் மேன்மையை, சிறப்பை, வளத்தை, இனிமையைப் புகழ்ந்துரைத்துப் புலப் படுத்திய குருபரர், பிறமொழியை வெறுத்தாரல்லர்; பாராட்டவே செய்தார். தாய்மொழிப் பற்றில் திளைத்த உள்ளம், பிறமொழி வெறுப்பில்லாத உள்ளமாகவே இருந்தது.

மதுரைக் கலம்பகம் என்னும் பனுவலில், பாட்டுடைத் தலைவராகிய சோமசுந்தரக் கடவுளைப்

''பொழிந்தொழுகு முதுமறையின்
சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகும் தீந்தமிழின்
மழலைசெவி மடுத்தனையே!''

என்று பாடி, வடமொவி வேதங்கள் பழமையானவை என்றும் சுவைமிக்கவை என்றும் பாராட்டுகின்றார்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், அங்கயற்கண்ணியை, 'பழைய வேதங்களின் இளந்தளிர்' என்ற பொருளில்,

''பழமறையின் குருந்தே!''
என்றுரைத்து, பழமறையைப் போற்றுகின்றார்.

முத்துக்குமரசாமி பிள்ளைத் தமிழில், குமரக் கடவுளின் திருவாயை,

''மழலை ததும்பப் பழமறையை
வடித்து தெளிந்த வார்த்தையொன்று
மொழியும் பவளச் செங்கனிவாய்''

என்று புகழ்ந்து வடமொழிவேதத்தைச் சிறப்பிக்கின்றார். இப்பனு வலிலேயே கலைமகளை,

''துறைத் தமிழொடும் தொன்மறை
தெளிக்கும் கலைக்கொடி''

என்றிசைத்து, வடமொழி வேதங்கள் தொன்மையானவை என்றேத்துகின்றார்.

தாய்மொழிப்பற்றின் காரணமாக வடமொழியை வெறுக்காமல் போற்றிய கவிஞர், வடமொழி நூற் கருத்துக்களை யும் உத்திகளையும் மனதில் வாங்கிக் கொண்டு, வெறுப்பில்லா மல், தம் படைப்புகளில் பயன்படுத்திக் கொண்டுள்ளமையும் நோக்கத்தக்கது. எங்ஙனம் பயன்படுத்தியுள்ளார் என்று ஆய்வாளர் கள் விளக்கியுள்ளனர். குறிப்பாக, வடமொழி நியாய சாஸ்திரத்தில் உள்ள "இந்துஷ் வேட நியாயம்" "மக்ஷிகா நியாயம்" என்ற இரண்டு நியாயங்களை, குருபரர், தம் நிதிநெறி விளக்கத்தில் கையாண் டுள்ளார் என்பர்.

பிறைமதியை யாரும் காண முடிமேல் ஏற்றும், நஞ்சைத் திருமிடற்றில் மறைத்து அடக்கியும் நின்ற பண்பால் சிவபெருமான் வணங்கத்தக்கவர் ஆனார் என்பது 'இந்துஷ் வேட நியாயம்'. இந் நியாயம் எல்லோர்க்கும் பொருந்துவதைக் கண்ட குருபரர் "பிறருடைய பெருமைகளை வெளியிட்டும், சிறுமைகளை மறைத்து வாழும் பெருந்தன்மையாளர்களை எல்லோரும் போற்றுவர் என்றுரைப்பார்.

உடம்பின் நற்பகுதிகளை நீக்கிப் புண் உள்ள இடத்தின் அழுக்கையே ஈயானது விரும்பும்; அதுபோல் இழிந்தவர்கள் உள்ளனர் என்பது 'மக்ஷிகா நியாயம்'. இந்நியாயத்தின் அடிப்படை யில், பிறர்மனை நோக்கி, பண்பிழந்து, காமம் கொண்ட மானிடரை, வாயில் இருக்கும் இனிய உணவை உமிழ்ந்துவிட்டு நஞ்சை உண்டு

அழிவு தேடுகின்ற விலங்குகள் என்று நீதிநெறி விளக்கத்தில் பாடுவார்.

வடமொழி வேதங்களைப் புகழ்வதையும், வடநூற் கருத்துகளை உள்வாங்கித் தம் நூல்களைப் பயன்படுத்திக் கொள்வதையும் கவனித்தால், பிறமொழி வெறுப்பில்லாத, தூய தமிழ்ப் பற்றுள்ளத்தைக் காணமுடியும்; காணவே குருபரரின் மேன்மை மிகுந்த தமிழ் உள்ளத்தைப் புரிந்து கொள்ளலாம். "தாய் மொழிப் பற்றோடு இருங்கள்; அதற்காகப் பிறமொழிகளை வெறுக்காதீர்கள்; கேலி செய்யாதீர்கள்" என்று குருபரரின் மேன்மை மிகு தமிழ் உள்ளம் கூறுவதையும் நாம் உய்த்துணரலாம்.

தாய்நாட்டை மறவாத உள்ளம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த உள்ளமும், ஆன்மிக நாட்டமும், ஞானவேட்கையும் கொண்ட போதும், அவர் சொந்த மண்ணை மறவாதிருந்தர்; விண்ணகம் வரை அவர்தம் கற்பனைச் சிறகு பறந்தபோதும், அவர்தம் நல்லிதயம், தாம் பிறந்த பாண்டிய நாட்டையே எண்ணியது. பாண்டிய நாட்டையே சிவலோகமாகக் கண்டதோடு, பாண்டிய மன்னர்களிடம் பேரன்பு கொண்டிருந்த மணிவாசகர் போலப் பாண்டிய நாட்டிடமும் பாண்டிய குலத்தின் மீதும் பேரன்பு நிறைந்தவராகக் காணப்படுகிறார். பாண்டிய மண்ணின் இயல்புதானே இது! ஆன்மிக நெறியில் பயணம் மேற்கொண்டு ஞான வேட்கையில் நடந்த போதும், அடிமனத்தில் பாண்டிய நாடு குறித்த நினைவும் இருந்தது. நன்மாறனும், நெடுஞ்செழியனும், உக்கிரப் பெருவழியும், நெடுமாறனும், சுந்தரபாண்டியனும், வீரபாண்டியனும் ஆண்ட பாண்டிய நாட்டை நாயக்கர்கள் ஆள்கின்றார்களே என்ற ஆதங்கம் மனத்துள் இருந்தது. இவ்வுணர்வு மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழில் வெளிப்படுகிறது.

".. விரைசெறி
வரைசெய் புயமிசை வையம்வைத் தாற்றிய
வழுதி"

"இமயம் என்னமனு முறைகொள் தென்னர்"

"முழுதுல குடையதொர் கவுரியர்"

"மும்மைத் தமிழ்ச் செழியன்"

முதலிய தொடர்கள் பாண்டிய குலத்தின் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துவன. அம்புலிப் பருவத்தில்,

"மற்றொரு சுதந்தரம் நினக்கென இலை"

என்று நிலவைப் பார்த்துப் பாடுவதில், பாண்டிய நாட்டை நாயக்க மன்னர்கள் ஆள்கின்றார்களே என்ற ஆதங்கமும் சுதந்தர வுணர்வும் வெளிப்படுகின்றன என்பர். இப்பாடல் வரிக்கு விளக்கம் எழுதும் ஆய்வாளர் ஆ.குணசேகரன்,

> "பிறமொழியாளர்களுக்கு அடிமைப்பட்டுத்தன் தாய்மொழியின் வளர்ச்சியைப் பற்றி எண்ணாது இருக்கும் தமிழினத்தினைப் பற்றி உணர்ந்த குமர குருபரர், தம்மினம் விழித்தெழ வேண்டும் என்ற எண்ணத்துடன், மதுரையைப் பற்றிப் பாடும்போது இனவுணர்வுடன் கூடிய கற்பனையாகத் தமது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் பாடுகின்றார்.

நிலவே உனக்கென ஒரு சுதந்திரமில்லை
நீ கதிரவன் வழங்கும் ஒலியைப் பெற்று
உலாவுகின்றாய்!

> சுதந்தரமற்ற வாழ்வு ஒரு வாழ்வா? என்று சாடுவதாக இப்பாடல் அமைகின்றது. பாண்டியர்களின் காலத்தில் சிறப்புற்று விளங்கிய மதுரை மக்கள் தெலுங்கு நாயக்க மன்னர்களின் ஆட்சியில் தன்னிலை இழந்து அவலப்பட்ட நிலையை விளக்குகின்றார்."

என்று எழுதுவது நோக்கத்தக்கது. 'குமரகுருபரர் கற்பனை' பற்றி முனைவர்பட்ட ஆய்வுசெய்த ஆ. கந்தசாமியும், உயர்தன்மை வாய்ந்த தமிழினம் வீறுகொண்டு எழவேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக இப்பாடற் கற்பனையைக் கண்டு, "சந்திர மரபைச் சார்ந்த பாண்டியர் இனம், அவர் காலத்தில் தெலுங்கர்களுக்கு அடிமையாகி வாழ்ந்த அவலநிலையைக் கண்டு வருந்தும் உள்ளத்தின் வெளிப்பாடாக இக்கற்பனை அமைந்துள்ளது" என்று எழுதிச் செல்வதும் சிந்திக்கத்தக்கது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தம் உணர்வை 'மனோன்மணீயம்' நாடகத்தில்,

> ***''விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி***
> ***தற்சுதந் தரமறும் அற்பர்வாய்ப் படுமோ?***
> ***...............................***
> ***அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்***
> ***நாட்டபி மானம்உள் மூட்டிய சினத்தீ***
> ***அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு***
> ***...............................***
> ***பாண்டியர் உரிமைபா ராட்டும் பண்பினர்***
> ***சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று''***

என்று ஒரு பாத்திரத்தின் கூற்றில் வைத்து வெளிப்படுத்துவது இங்கு இணைந்து எண்ணத் தக்கது. இலக்கியப் படைப்பாளிகள் வாய்ப்பு ஏற்படும் போது அல்லது வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு

தம் உணர்வை வெளிப்படுத்துவர். குமரகுருபரரும் அம்புலிப் பருவத்தை வாய்ப்பாகக் கொண்டு, தம் உள்ளம் சுதந்தரம் விரும்பும் உள்ளம், பாண்டிய நாட்டுத் தமிழ் உள்ளம் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

சாதிக்கும் செயல் உள்ளம்

குருபரர் உள்ளம், நினைத்ததைச் சாதிக்கும் செயல் உள்ளம். இடர்ப்பாடுகள் கண்டு கலங்காத தமிழ் உள்ளம். கடைசி வரை முயற்சி செய்க என்று நீதிநெறிவிளக்கத்தில் அறிவுறுத்திய குருபரர், முயற்சி செய்து வெற்றி பெற்ற சாதனையாளர்.

குருபரர் வாழ்ந்த காலம், வடபாரதத்தில் மொகலாய மன்னன் அவுரங்கசீப் ஆண்டகாலம். அவன், சகோதரர்களைக் கொன்று, தந்தையைச் சிறையில் வைத்து, கடுமையாக ஆட்சி புரிந்தவன். தம் மதமே உயர்ந்தது என்று, பிற மதத்தார்க்குக் கொடுமைபல செய்தவன். எனவே அமைதியற்றிருந்தது காலம். அவுரங்கசீப் விசுவநாதர் கோயிலை முற்றிலும் இடித்துவிட்டு, அங்கே, ஒரு பெரிய மசூதி கட்டினான். கேதாரநாதர் கோயிலும் அவனால் இடிக்கப்பட்டது. இருந்த இடம் தெரியாமல் ஆக்கப் பட்டது. சான்றோர்கள் மனம் துடித்தது.

தென்பாரதத்து மக்களுக்கு, குறிப்பாக, தமிழக மக்களுக்கு, ஆன்மிக யாத்திரையின் இலக்காக, காசிநகரமும், அங்குள்ள திருக்கோயில்களும் உள்ளதை யாவரும் அறிவர்.

> **''தொண்டர் அஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்**
> **இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம்என்பரால்**
> **வண்டு பாட மயிலாட மான்கன்று துள்ளவரிக்**
> **கெண்டை பாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே''**

என்ற திருஞானசம்பந்தரின் பாடலையும்,

"வாழ்வாவது மாயம்இது
மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல்
பசிநோய்செய்த பறிதான்
தாழாதறம் செய்மின்தடங்
கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக்
கேதாரமெ னீரே!"

என்ற சுந்தரரின் சந்தப் பாடலையும் படித்தவர்கள் கேதாரத் திருக்கோயிலை மறக்க முடியுமா! இப்பாடல்கள் கேதாரம் பற்றிய தமிழ் மக்களின் உள்ளவுணர்வின் வெளிப்பாடுகள்! தம் வாழ் நாளின் கடைசிக் காலத்தில், காசி சென்று, கங்கையில் நீராடி, சிவபரம்பொருளை வழிபட்டு, முத்தி பெற்றிட வேண்டும் என்று ஆசைப்படும் தமிழ் மக்களின் நெஞ்சத் துடிப்பைச் சொல்ல முடியுமா! குருநாதர் கட்டளையேற்றுக் காசி சென்று கண்களால் கண்டு மனம் துடித்தார் குருபரர்.

திருமடம் ஒன்று கட்டி, தங்கி, திருக்கோயில்களைப் புதுப்பித்து, அன்புநெறியாம் சைவத்தைப் பரப்பித் தொண்டாற்றிச் சாதனைபுரிய வேண்டும் என்று குருபரர் உள்ளம் விரும்பியது. குருபரர் காசிசென்ற சமயம், ஷாஜகான் மகன் தாராஷீகோ ஒரு சர்வ சமய மாநாடு நடத்தினான். சகலகலாவல்லி பாடி இந்துஸ்தான் மொழியுணர்ந்து, சர்வசமய மாநாட்டில் இளந்துறவி குருபரர் கலந்து கொண்டார். ஞான மழை பொழிந்தார். தாராஷீகோ உள்ளம் கவர்ந்தார் "தங்களுக்கு ஏதேனும் செய்ய விரும்புகிறேன்" என்றான் அவன். குருபரர் "நான் துறவி. தேவை எதுவும் இல்லை. ஆனால் காசியில் தங்கிச் சைவசமயத்தைப் பரப்பிட, ஒருமடம் வேண்டும்" என்றார். மனம் இளகிய அவன் வீதியில் கவிஞரை அழைத்துவந்து வானத்தைப் பார்த்தான். இரட்டைக் கருடன்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. வட்டமிட்டுப் பறந்த இடம் முழுவதையும்

தானமாக – சாசனமாக எழுதிக் கொடுத்தான். காசிநகரின் பாதி அது. கோட்டைபோல் திருமடம் எழுந்தது. அதுவே இன்றைய குமாரசாமி மடம். தமிழ்நாட்டிலிருந்து, அன்றுமுதல் செல்லும் அன்பர்களுக்கு, இம்மடம் சகல வசதிகளையும் செய்து தருகிறது. தன்னந்தனியாக, இறையருளை மட்டும் துணையாகக் கொண்டு, சமயம் பொறை இல்லாத சூழ்நிலையில், தம் சமய நெறியைப் புலப்படுத்தி, காசியில் பாதி இடத்தைப் பெற்று, தற்சமயம் பரப்ப, திருமடம் ஒன்று கட்டித் தங்கியது பெரும் சாதனையாகும். சாதிக்கும் உள்ளம் குருபரர் உள்ளம் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு. திருக் கோயில்களைப் புதுப்பித்தார். குறிப்பாகக் கேதாரநாதர் திருக் கோயிலினை அழகுப்படுத்தினார். மக்களின் உள்ளத்தைக் குளிர் வித்தார்.

காசிக்குச் செல்வது என்பது சாதரணமானது இன்று. இன்றுபோல் இல்லை அன்று. சாதிப்பதற்கு அவர் மேற்கொண்ட பயணம் கடுமையானது. இதனை 'ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் வரலாறு' என்ற நூலில்,

"காசி என்பது 1500 மைல் தொலைவில் கங்கைக் கரையில் உள்ள பெருநகரம். குருபரர் காசியை நோக்கிப் பயணம் செய்த காலத்தில் பயணம் எவ்வளவு கஷ்டம் என்பதை இன்று நாம் எண்ணிப் பார்க்க முடியாது. அன்று நாடு முழுமையுமே துண்டு துண்டான சமஸ்தானங்களாக இயங்கிக் கொண்டிருந்தது. எங்கும் போர்கள் – மராத்தியர், முகம்மதியர், பிற சுதேச மன்னர்கள் இவர் களுக்கு இடையில் எந்த நேரமும் போர்கள். ஆகவே இந்த நாடுகள் வழியே செல்லும் போது உயிருக்கே ஆபத்து. அராஜகம் காரண மாக வழியெங்கும் கேட்பாரற்ற கொள்ளைக் காரர்கள். தவிர இடை யில் உள்ள மொழிகள் பல. தமிழ் நாட்டுக்கு அப்பால் தெலுங்கு, மராத்தி, இந்துஸ்தானி, உருது இவை, தமிழுக்குப் பழக்கம் இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சைவ உணவு கிடைப்பது அருமை......

காவிரிக் கரையில் இருந்து புறப்பட்ட குமரகுருபரர் அவுரங்கசீப்பின் நிருவாகத்தில் இருந்த தக்காணத்தைக் கடந்து காசியை அடைந்தார் என்பது, மிகவும் அற்புதமான சாதனை; ஏன் எனில் அவன் சமயப் பொறை இல்லாது இந்து சமயத்தினரை மிகவும் துன்புறுத்தினான் என்று வரலாறு சொல்லும்”

என்று மு. அருணாசலம் விளக்குவது நோக்கத்தக்கது. சாதிக்கச் செல்வது கடுமையானது என்று தம் எண்ணத்தைக் கைவிடாமல், துணிந்து பயணம் செய்து, முயற்சி செய்து, சாதித்த குருபரர் பாராட்டுக்குரியவர். சாதிக்க வேண்டும் என்று துடித்த அவர் தமிழ் உள்ளம் நமக்கும் வேண்டும்.

“அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்”

என்ற குறட்பா இங்கு நினைக்கத் தக்கது.

விழுமிய கொள்கை

குருபரரின் தமிழ் உள்ளம் விழுமிய கொள்கை ஒன்றைக் கொண்டிருந்தது. பக்தி உணர்வும் ஞான நாட்டமும் கொண்ட அவர்தம் தமிழ்உள்ளம் மானிடரைப் பாடாமல் தெய்வத்தை மட்டுமே பாடவேண்டும் என்ற விழுமிய நோக்கை உறுதியாகக் கொண்டிருந்தது. இக் கொள்கையை அவர்தம் இலக்கியக் கொள்கைகளில் ஒன்றாகக் கூடக் கருதலாம். அரசர்களோடு தொடர்பு கொண்டிருந்தும், அவர், எவரையும் முன்னிறுத்தி விளித்துப் பாடவில்லை; புகழவில்லை இக் கொள்கையைத் தம் முன்னோர்களிடம் இருந்து இவர் பெற்றிருக்கலாம்.

இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட ஆலால சுந்தரர், இறைவனுக்கு மட்டும் மீளா அடிமையாய் இருந்து, பொய்மை யாளரைப் பாடாமல் சிவபரம் பொருளை மட்டும் பாட வேண்டு மென்று,

''தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுற வில்லையே!''

என்று திருப்புகலூர்ப் பதிகத்தில் பாடினார். இப்பதிகம் முழுவதும் இக் கருத்தே ஒலிக்கின்றது! பொருள் கொடாத புல்லர்களைப் பாடாமல், பரம்பொருளைப் பாடினால் இம்மையிலும் மறுமை யிலும் இறையருளால் இனிதிருக்கலாம் என்று அறிவுறுத்து கின்றார்.

''பொடிக்கொள் மேனிஎம் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவவீர்காள்
அடுக்கு மேல்அமர் உலகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுற வில்லையே''

''பூணி பூண்டுழப் புட்சி லம்புந்தண்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணி யாய்அமர் உலகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுற வில்லையே''

என்று பதிகம் முழுவதும் தம் கருத்தை வலியுறுத்திப் பாடுகின்றார்.

வைணவப் பெரியாராகிய நம்மாழ்வார் வைணவ உலகில் குறிப்பிடத்தக்கவர். மதுரகவியாழ்வாரின் குருநாதர். திருவாய் மொழி என்னும் தேனினும் இனிய பாசுரங்களைப் பாடியவர்.

"உண்ணும் சோறு பருகுநீர் தின்னும்
வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெரு மான்என் றென்றே
கண்கள்நீர் மல்கி"

வாழ்ந்தவர். அவர் சுந்தரரைப் போலவே மானிடரைப் பாடாது தெய்வத்தைப் பாடுக என்று அறிவுறுத்தியவர்.

"வாய்க்கொண்டு மானிடம் பாடவந்த
கவியேன் அல்லேன்"

என்பது அவர்தம் அற்புதக் கவித்தொடர். "நாக்கொண்டு மானிடம் பாடேன்" என்ற நம்மாழ்வார்,

"சொன்னால் விரோதம் ஆகிலும் சொல்லுவேன்
கேண்மினோ
என்நாவில் இன்கவி யான்ஒரு வர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தெனாஎன்று வண்டு முரல்திரு வேங்கடத்து
என்னானை என்னப் பன்எம் பெருமான் உளனாகவே"

என்று அழுத்தமாக் கூறினார். புலவர்களை வருக என்று அழைத்து, தெய்வத்தைப் பாடினால் நலம்பெறலாம் என்று பொருளில்,

"வம்மின் புலவீர், நும்மெய் வருந்திக் கைசெய் துய்ம்மினோ
இம்மன் உலகி னில்செல் வர்இப் போதில்லை நோக்கினோம்
நும்இன் கவிகொண்டு நும்இட்ட தெய்வம் ஏத்தினால்
செம்மின் சுடர்முடி என்திரு மாலுக்குச் சேருமே!"

என்று பாடினார். இத்திருமொழி, சுந்தரருடைய திருப்புகலூர் பதிகத்தை நினைவூட்டும்.

கந்தக் கடவுளைத் தவிர எந்தக் கடவுளையும் பாடாத அந்தக் கவிஞர் அருணகிரிநாதர்,

"முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி உழலாதே"

என்று பாடி, இறந்து போகும் மானிடரைப் பாடாதிருக்க வேண்டும் என்கிறார்.

சுந்தரர், நம்மாழ்வார், அருணகிரிநாதர் முதலிய பெரியோர் களிடம் இருந்து, மானிடரைப் பாடாமல் பரம்பொருளை மட்டும் பாடவேண்டும் என்ற கொள்கையைப் பெற்றிருக்கலாம் குருபரர். முன்னோர்களைப் போற்றிப் பாராட்டுகின்ற சீரிய பண்புடைய குருபரர், முன்னோர்களின் கொள்கையைப் பின்பற்றியதில் வியப்பில்லை.

குருபரர் வாழ்ந்த காலம், புலவர்கள், மன்னர்களையும் செல்வந்தர்களையும் பாடிப் பரிசில் பெற அலைந்து கொண்டிருந்த காலம். படிக்காசர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், கடிகை முத்துப் புலவர் முதலியோர் அரசர்களையும் செல்வந்தர்களையும் பாடிப் புகழ்ந்தமையை இலக்கிய வரலாற்றால் அறியலாம். பெரும் புலவராகிய படிக்காசர்,

"கல்லடிக்கும் உளியிரண்டு
காதடிக்குள் அடிப்பதெனக்
கவிதை கேட்டுப்
பல்லடிக்குக் கிடுகிடெனப்
பறையடிக்கும் நெஞ்சர்தமைப்
பாடு வேனோ

வில்லடிக்கும் பிரம்படிக்கும்
கல்லடிக்கும் விரும்பிநின்ற
மெய்யன் ஈன்ற
செல்லடிக்கும் தடவரையில்.
சேறடிக்க அலையடிக்கும்
செந்தி லானே!''

என்று பாடிவிட்டு,

''காய்ந்து சிவந்தது சூரிய காந்தி; கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்; தொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவணர் நெஞ்சம்; அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி இருகரமே!''

என்று வள்ளல் சீதக்காதியைப் பாடிப் போற்றியதைச் சான்றாகக் காட்டலாம்.

தம் சமகாலப் புலவர்கள், மன்னர்களையும், செல்வந்தர் களையும் நாடிச் சென்று, புகழ்ந்து பாடி நின்றமையைக் கண்ட குருபரரின் தமிழ் உள்ளம் வாடியது. திருமலைநாயக்கரின் சபையிலேயே பாடிநின்ற புலவர்களை நேரடியாகக் கண்டிருக்க லாம்.

''மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்''

என்று மேன்மைமிகு உணர்வோடு கலைமகளை வேண்டும் அவர்தம் தமிழ்மனம் வேதனைப்பட்டது. எல்லாம் வல்ல பரம் பொருளைப் பாடி, இனிய இம்மை வாழ்வும் சீர்மிகு முத்திப் பேறும் பெறாமல், புலவர்கள் தங்கள் கவிவளத்தையும் காலத்தையும்

வீணாக்குகிறார்களே என்று, ஞான பரம்பரையில் வந்த குருபரர் உள்ளம் துயரப்பட்டது. அதனால் “அரசவை வியக்கும் வண்ணம், தேன்போன்ற சுவை மிக்க செந்தமிழைத் தெளிக்கும் செந்நாப் புலவர்களே! இந்திரனது செல்வத்துடன் விளங்கி, இறுதியில் அழியாத முத்தி நலத்தை வழங்கும் செந்நெறியை வினவுவீர் களாயின், இனிய புகழ்ப் பாடல்களைத் தொடுத்து, பரஞ்சுடரை, நாவில் தழும்பு இருக்கும் வண்ணம் நீங்கள் ஏத்துவீர்களாக” என்ற பொருள் தோன்ற,

‘‘வேத்தவை வியப்ப விரைத்தேன் பில்கும்
தேத்தமிழ் தெளிக்கும் செந்நாப் புலவீர்!
மண்மகள் கவிதைத் தண்நிழல் துஞ்சப்
புரவுபூண்டு இந்திர திருவொடும் பொலிந்து
முடிவினும் முடியா முழுநலம் கொடுக்கும்
செந்நெறி வினவுதிர் ஆயின் இன்னிசைப்
பாத்தொடுத்(து) அடுத்த பரஞ்சுடரை
நாத்தழும் பிருக்க ஏத்துமின் நீரே!’’

என்று பாடினார். பரம்பொருளைப் பாடுங்கள் என்று கூறவந்த புலவர்பெருமான், தம் கருத்தை அழுத்தமாகக் கூறவிரும்பி, “நாத்தழும் பிருக்க ஏத்துமின்!” என்று கூறினார்.

‘சிதம்பரச் செய்யுட்கோவை’ குருபரரின் சிறந்த படைப்பு களுள் ஒன்று. ஒருமுறைக்கு மூன்று அழைத்து, புலவர்களை, இறைவனைப் பாடப் பணிக்கின்றார் குருபரர்.

‘‘செல்லார் பொழில்தில்லைச்
சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப்
புகழ்மினோ வம்மின் புலவீர்காள்!
முத்தேவர் தேவை
முகிலூர்தி முன்னான

புத்தேளிர் போலப்
புகழ்மினோ வம்மீன் புலவீர்காள்!
ஆங்கற் பசுக்கன்
றளித்தருளும் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப்
புகழ்மினோ வம்மின் புலவீர்காள்!''

என்பது அவர்தம் பாடல். புலவர்களைப் பாடி வீணாகமல், பரம்பொருளைப் பாடி நலம்பெற்றுய்ய வேண்டும் புலவர்கள் என்ற நோக்கில், குருபரர், இவ்வாறு பாடுகின்றார்.

இறைவனைப் பாடாமல், புல்லவர்களைப் பாடித் திரிகின்றவர்களைக் கண்ட குருபரர்க்குக் கோபம் பெருகியது. கோபம் பாடலாக வெளிப்பட்டது.

''பற்றம் பலமிதித் துத்துதித் தேசெவ்வி பார்த்துப்புல்லர்
வெற்றம் பலந்தொறும் மெய்இளைத் தேறுவர் வீணர்கெட்டேன்
குற்றம் பலபொறுத்(து) என்னையும் ஆண்டுகொண் டோன்புலியூர்ச்
சிற்றம் பலம்கண்டு பேரம் பலத்தைச் செய்யாதவரே!''

என்பது அவர்தம் சிதம்பரச் செய்யுட் கோவைக் கவிதை. பல்லால் மென்று துப்பிய தாம்பூல எச்சிலை மிதித்துத் துதித்த வண்ணம், தாம் காண இருக்கும் புல்லர்களின் செவ்வியைப் பார்த்து, அற்பரின் பயனற்ற சபைதோறும் உடல் இளைத்துச் செல்கின் றார்களே என்று கோபப்படுகின்றார் புலவர்.

மனித மேம்பாட்டுச் சிந்தனை உள்ளம்

மன்னனையோ, வள்ளலையோ யாரையும் புகழ்ந்து பாடாமல் தெய்வத்தை மட்டும் பாட வேண்டும் என்ற விழுமிய

கொள்கையை விடாப்பிடியாகக் குருபரர் கொண்டிருந்தபோதும், மனிதகுலம் மேம்பட்டு உய்ய வேண்டும் என்பதை மனதில் கொண்டிருந்தார் என்பது முக்கியமானது.

எழுதுகோல் எடுக்கும் எந்த நல்ல உயர்வான படைப்பாளிக்கும், மனித மேம்பாடு பற்றிய சிந்தனை இருக்கும்; இருக்க வேண்டும்; மனித மேம்பாடுபற்றிய உணர்வே ஒரு நல்ல இலக்கிய படைப்பாளியின் குறிக்கோளாக அமையும்.

''நமக்குத் தொழில்கவிதை நாட்டுக் குழைத்தல்
இமைப்பொழுதும் சோரா திருத்தல்''

என்றுரைத்த பாரதி,

''பாட்டுத் திறந்தாலே - இவ்வையகத்தைப்
பாலித்திட வேணும்''

என்று பாடியது மனித மேம்பாட்டு உணர்வால்தான்.

அற்புதமான கற்பனைகளையும் ஆன்மிக உணர்வையும் அழகாகப் பாடிய குருபரரை, எக்கோணத்தில் இருந்து நோக்கினாலும், அவர்பால் மனிதமேம்பாட்டுச் சிந்தனை மேலோங்கி இருந்ததைக் காணமுடியும். அக்கவிஞர்கோமான் ஆற்றிய பணிகள், அவர்தம் மனிதமேம்பாட்டு உணர்வை மெய்ப்பிக்கக் கூடியவை.

''உலகில் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண எடுக்கப் பெறும் முயற்சி, சமூக மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்; பண்பாட்டை வளர்க்கும். ஒரு சமுதாயத்தில் பண்பாடு செம்மைப் பட்டு உயர்வடையும் போது மனித மேம்பாடு கைகூடுகிறது. மனிதர்களுக்குள் காணப்படும் சாதி, மத, இனவேறுபாடுகளைக்

களைந்து முழுமையாக அனைவரும் சமம் என்கிற நிலையைத் தோற்றுவித்தல் மேம்பாட்டு நிலையெனக் கூறலாம்" என்று மனித மேம்பாட்டை ஆய்வாளர் புலப்படுத்துவர்.

மனித மேம்பாட்டுக்கு அடிப்படையான பண்பாட்டை அறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் "சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம்" என்று புலப்படுத்துவார். இன்றைய ஆய்வாளர் " மனிதனின் அகநல ஆக்கமாக விளங்கும் அன்பு – அறிவு – ஆற்றல் – இன்பம் – இயல்பு – உணர்ச்சி – எழுச்சி – வீரம் – தீரம்– ஈவு – இரக்கம் – அமைதி – அடக்கம் – ஒப்புரவு – ஒழுக்கம் – உண்மை – ஊக்கம் – சினம் – சீற்றம் போன்றவற்றில் மேன்மையையும் உயர்த்துவது பண்பாடு என்றழைக்கப்படுகிறது" என்று விளக்குவர்.

நல்ல பண்பாட்டை ஆன்மிக உணர்வும் அறவழிச் சிந்தனைகளும் உருவாக்கத் தக்கன. உயரிய பண்பாடு மனிதனிடம் மேலோங்கும் போது மனித வாழ்வு மேம்பாடடைகிறது. தனிமனித வாழ்வு உயர்ந்த பண்பாடுகளால் மேம்படும் போது முழுச்சமூகம் மேம்பாடு அடைகிறது.

மனிதனை ஆட்டிப் படைப்பது ஆசை. எவ்வளவு பொருள் சேர்த்தாலும் மேலும் மேலும் சேர்க்க வேண்டும் என்ற ஆசை வளர்கிறது. "அம்பொன்மிக வைத்த பேரும் நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்" என்றார் தாயுமானவர். இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் கண்ணதாசன், ஆசையை,

> "சிறுவயதில் வேலையின்றி அலைந்த போது, மாதம் இருபது ரூபாயாவது கிடைக்கக் கூடிய வேலை கிடைக்காதா என்று ஏங்கினேன். கொஞ்ச நாளில் கிடைத்தது. மாதம் இருபத்தைந்து ரூபாய்

> சம்பளத்தில் ஒரு பத்திரிகையில் வேலை கிடைத்தது. ஆறு மாதம்தான் அந்த நிம்மதி. மாதம் ஐம்பது ரூபாய் கிடைக்காதா என்று மனம் ஏங்கிற்று. அதுவும் கிடைத்தது. வேறொரு பத்திரிக்கையில், பிறகு மாதம் நூறு ரூபாயை மனம் அவாவிற்று. அதுவும் கிடைத்தது. மனது ஐநூறுக்குத் தாவியது. அது ஆயிரமாக வளர்ந்தது. ஓராயிரமாகப் பெருகிற்று. யாவும் கிடைத்தன. இப்பொழுது, நோட்டடிக்கும் உரிமையையே மனது கேட்கும் போலிருக்கிறது. எந்தக் கட்டத்திலும் ஆசை பூர்த்தியடையவில்லை"

என்று சுவைபட விளக்குவார்.

எவ்வளவு பொருள் தேவையோ அவ்வளவு பொருள் இருந்தால் போதும் என்று எண்ணினால் சிக்கல் இல்லை. கிடைத்தது போதும் என்று நினைத்து, அறிவுச் செல்வத்தைப் பெருக்கினால் மேம்பாடு உண்டு. இதனை ஆன்மிக உணர்வோடு,

> ''செல்வம் என்பது சிந்தையின் நிறையே
> அல்கா நல்குரவு அவாவெனப் படுமே
> அல்லல் செய்யும் அவாவெனப் படும்அவ்
> உறுமையி னின்றும் வாங்கி
> அறிவின் செல்வம் அளித்தாள் எனக்கே''

என்று சிதம்பர மும்மணிக் கோவையில் குருபரர் பாடுவார். ஆசை கொள்ளாத வாழ்வும், அறிவே செல்வமாகக் காணும் எண்ணமும் மனித மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் தன்மையது என்பதை இப்பாட்டின் கருத்தின் வழி நிறுவுகின்றார் குருபரர் என்பர் திறனாய்வாளர்.

ஆசையை வளர்த்துக் கொள்ளாமல் அறிவை, ஞானத்தைச் செல்வமாகக் கொண்டால் தெய்வம் என்பதோர் சித்தம்

உண்டாகும். கற்றதனால் ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவது என்பர் வள்ளுவர். உண்மையான இறைவழிபாடு, ஆன்மிக உணர்வு, ஆணவத்தை நீக்கி மனத்தைப் பண்படுத்தும்; மனித வாழ்வு மேம்படும். அதனால்தான்,

"நீரிற் குமிழி இளமை, நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத(து) எம்பிரான் மன்று"

என்று பாடி இறைவழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்துகிறார் கவிஞர்.

ஆன்மிக உணர்வோடு கல்வி கற்று, பிறர்க்குத் தீமை செய்யாமல், நன்மை செய்து, பண்பும் பேரன்பும் கொண்டு, பிறன்மனை விழையாமல் ஒருத்தியுடன் வாழ்ந்து, மெய்ப்பொருள் கண்டால் மனித மேம்பாடு முழுமைபெறும் என்று நீதிநெறி விளக்கம் என்ற அறச் சிந்தனை நூலால் குருபரர் அறிவுறுத்து கின்றார்.

நிறைவாக

முழுப்பார்வையில் கவிஞர்கோமான் குமரகுருபரரை நோக்கும் போது, குமரகுருபரரின் தமிழ் உள்ளம்,

"பக்திமணம் கமழ்வதாக –
குருபக்தி நிறைந்ததாக –
கவிதையார்வம் மிக்கதாக –
கல்வியில் ஈடுபாடு உள்ளதாக –
இளகியதாக –
தொண்டுபுரியும் உயர்நோக்கம் உள்ளதாக –
அடக்க வுணர்வு கொண்டதாக –
தன்மான உணர்ச்சி மிக்கதாக –
ஒழுக்க உணர்வு மிகுந்ததாக –

முன்னோர்களை மதிப்பதாக –
பொதுநோக்குக் கொண்டதாக –
தேசியக் கண்ணோட்டத்தின் உறைவிடமாக –
தாய்மொழிப் பற்றின் இருப்பிடமாக –
பிறமொழி வெறுப்பற்றதாக –
தாய்நாட்டுப் பற்று மிக்கதாக –
விழுமிய கொள்கை உடையதாக –
மனித மேம்பாட்டுணர்வு நிறைந்ததாகத்

திகழ்வதை உணர்ந்து கொள்ளலாம். உணர்ந்து, நாமும் நம் நெஞ்சில், உள்வாங்கிக் கொண்டால் நலமே விளையும்.

பயன்பட்ட நூல்கள்

1. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு, (டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் குறிப்புரை, ஆராய்ச்சியுடன்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியீடு, 1988

2. மு. அருணாசலம், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள், திருச்சிற்றம்பலம், 1990

3. குமரகுருபரர் ஆய்வு மாலைகள், குமரகுருபரர் இலக்கிய ஆய்வுவிழா வெளியீடு, வாரணாசி, 1999.

4. ஆ. கந்தசாமி, குமரகுருபரர் கற்பனை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.